
www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# பனிவயல் உழவு

திருமாவளவன்

எக்ஸில் வெளியீடு

படிப்பகம்

www.padippakam.com

Name: Panivayal Ulavu
Author: Thirumavalavan
Edition: 1st, Novermber 2000
Cover Design &
Layout: digi Graphics & Studios
Illustrations: Rashmi
Printers: Viveka Print, Canada
Publishers: EXIL
27 Rue Jean Moulin
92400 Courbevoie, France
e-mail: exilfr@aol.com

படிப்பகம்

www.padippakam.com

என் தந்தை

**கப்டன் கனகசிங்கம்**

அவர்களுக்கு

கப்டன் கனகசிங்கம்

1940 களில் மலேசிய விடுதலைக்காக போராடிய மலேய தேசிய விடுதலை இராணுவத்தின் முன்னணி கெரில்லா படைப்பிரிவின் தளபதியாக முன்நின்று போராடியவர். இரண்டாம் உலகப் போரின் போது பர்மா ஊடாக இந்தியாவுக்கு தப்பிவந்தவர்.

இந்தியாவில் பிரிட்டிஷ் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு பீற்றர் கெனமன், கொல்வின் ஆர். டீ. சில்வா, என்.எம். பெரேரா ஆகியோருடன் சிறையிருந்தவர்.

விடுதலையான பின் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் அழைப்பின் நிமித்தம் இலங்கை மீண்டவர்.

வாழ்வின் இறுதிவரைக்கும் ஒரு மனிதநேயம் மிக்க கம்யூனிஸ்டாகவே வாழ்ந்தவர்

www.padippakam.com

# பதிப்புரை

இலங்கையில் வசித்த / வசிக்கும் தமிழ்மொழி பேசும் மக்களின் படைப்புலகம் விரிவடைந்த அளவிற்கு வெளியீட்டுத்துறை வளர்ச்சியடையவில்லை. படைப்புணர்ச்சிக்கு வாசல் திறந்து விடுவது வெளியீடுகளே. வெளியீடுகளுக்கான வாசல் கிடைக்-காதபோது படைப்புணர்ச்சி/நிஜ தரிசனம் தம் ஊற்றுக் கண்களை மூடிக் கொள்கின்றன.

இதை உணர்ந்து உக்கிரம் கொண்டபோது 1990இல் நாம் உருவாக்கியதுதான் EXIL. இலங்கைத் தமிழ்மொழி பேசுவோர் வாழ்வு யுத்தத்தை எதிர்கொண்டிருக்கிற காலம். யுத்தம் எவ்விதமான நியாயங்களை நமக்கு வழங்கினாலும் வாழ்வு கரை ஒடுங்கிக்கொண்டோ/ஒதுங்கிக்கொண்டோ இருக்கிறது. அஃது வாழும் பூமியைப் பேணியோ புதிய பூமிகளைத் தேடியோ ஒவ்வொரு மனைவாசலும் யுத்தமுனையாக்கப்பட்டிருக்கிறது. எவரும் விட்டுவிலக முடியாதபடி யுத்தம் எல்லோரையும் தன் சுழிக்குள் சிக்க வைத்திருக்கிறது. இதற்கு மனித/இயற்கை வளங்கள் எதுவும் தப்பவியலாது நிலைமை மோசமாகிவிட்ட நிலையில்.... "யுத்த உபாசனையைத் தவிர வேறொன்றும் நாமறியோம்" எனப் புலம்பெயர்ந்து வாழும் தமிழ்மொழி பேசுவோர் மத்தியில் உள்ளபடி நம் அவலங்களை உரத்துப் பேசுவோர் மிகச் சிலரே. இவர்களில் திருமாவளவனும் ஒருவர். புகலிடத் தமிழ் இலக்கிய உலகம் திருமாவளவனோடு நெருக்கமான பரிச்சயம் கொண்டது. அருகிப் போய் வரும் மறுத்தோடிகளின் இலக்கியக் குரலுக்கு EXIL வெளியீட்டகம் என்றும் தன் ஆதரவை வழங்கி வருகின்றது. இவ்வகையில் திருமாவளவனின் பனிவயல் உழவு எமது நான்காவது வெளியீடாக வெளிவருகிறது.

வாழ்வின் நிஜத்தை நோக்கிய தேடலில் ஆர்வம் கொண்டோர் எமது சீரிய முயற்சிகளுக்குத் தொடர்ந்தும் கை கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு எமது பணி தொடரும்.

லக்ஷ்மி
கலைச்செல்வன்
EXIL வெளியீட்டகம்



படிப்பகம்

# திருமாவளவனின் கவிதைப் புலம்

திருமாவளவனின் கவிதைகளை தொகுப்பாக வாசித்த பிற்பாடு மனதில் எழுந்த ஒரு கேள்வி: இந்தக் கவிதைகளுக்கு ஒரு அறிமுகம் அல்லது முன்னுரை அவசியந்தானா?

கவிதைத் தொகுதிகளுக்கு எழுதப்படும் முன்னுரைகள் வாசகர் களுக்கும் கவிஞருக்கும் இடையே சிலசமயங்களில் பாலமாகத் தொழிற்பட முடியும். எனினும் இந்த முன்னுரை அப்படியான-தல்ல. ஈழம், தமிழகம், சிங்கப்பூர், மலேசியா, புகலிட இலக்கியம் போன்ற பல தளங்களில் கவிதைகள் வேறுவேறு வண்ணங் களிலும் வடிவங்களிலும் இன்று நிறையவே வெளிவருகின்றன. இந்தப் பரந்த பின்னணியில் திருமாவளவனின் கவிதைகளின் இடம் என்ன என்பது பற்றிச் சில எண்ணங்களைப் பதிவு செய்வது கவிதைக்கும் கவிதை தொடர்பான விவாதங்கள், திறனாய்வு போன்றவற்றுக்கும் துணை தரலாம்.

திருமாவளவன் யாழ்ப்பாணத்திலிருந்து சென்னை ஊடாகக் கனடாவுக்குப் புலம்பெயர்ந்து விட்ட அகதிக் கவிஞர். நாற்பதுகளை ஒட்டிய வயதிலிருப்பவர். இந்த வயதுக் கால கட்டத்தில்தான் கவிதைக்குள் ஒருவகைத் தீவிர ஈடுபாட்டோடும் கட்டுப்பாடான ஆக்ரோஷத்தோடும் நுழைந்தவர். இழப்பு, துன்பங்கள், நாளாந்த அவலங்களோடு அவலங்களாகத் தன் குடும்பத்தையும் சுமந்துகொண்டு அலைந்து திரிந்து உழன்றவர்; சாதாரண மானுட அவலங்களோடு கூடவே யுத்த அவலங் களையும் பட்டுத் தெளிந்தவர்; அவற்றில் பட்டுத் தெறித்தவர். அந்த வகையில் அவருடைய கவிதைகள் வெளிப்படுத்துகின்ற முதிர்ச்சியும் அனுபவ ஆழமும் ஆச்சரியம் தருவன அல்லத்தான்.

"உண்மை கொடிதே உலகில் அதனுடனே
போரிட்டு வாழப் பிறந்தோம் கலங்குவதோ
வீரிட்டு அலறி விழுந்து புலம்புவதோ
பார் எட்டுத் திக்காய் பரந்து கிட்கிறது"

என்ற நிதானத்தோடு வாழ்க்கையையும் கவிதையையும் நிகழ்கால அரசியலையும் அணுகுகிற விமர்சிக்கிற ஒரு கவியின் ஆழ்ந்த உள்ளத்தை இந்தத் தொகுப்பில் காண முடிகிறது. அவரிடம் காணப்படுகின்ற இந்த நிதானம்தான் அவருடைய கவிதைகளையும் வித்தியாசமான குரலில் பேசவைக்கிறது

இந்த நிதானம் எப்படி அவருக்கு வாய்த்தது? இந்தத் தொகுதியில் உள்ள பல கவிதைகளில் ஊரில் சென்றொழிந்த காலங்களின் பசுமை பற்றிய கழிவிரக்கமும் அந்தக் கழிவிரக்கத்தினூடே வெளியாகிற சோகம் ததும்பும் கவியுணர்வையும் பார்க்க முடிகிறது. புலம் பெயர்ந்த சூழலில் மனித அனுபவங்களின் முக்கியமான ஒரு கூறாக இந்தக் கழிவிரக்கம் இருக்கிறது என்பது உண்மை. அகதிகளாக அல்லது அரசியல் தஞ்சம் கோருபவர்களாக அன்றி இன்னொரு நாட்டுக்கு செல்வம் சேர்க்கவும் பொருளாதார மேம்பாட்டுக்காக எனவும் குடி பெயர்ந்தோர் (Immigrants) மத்தியில் இத்தகைய கழிவிரக்கத்துக்கு நீண்ட ஆயுள் இருப்பதில்லை. ஏனெனில் அவர்களுக்கு எப்போதும் பிறந்த நாட்டிற்கு செல்ல வாய்ப்பிருக்கிறது என்பது மட்டுமின்றி எவ்வித அரசியல், யுத்த நிர்ப்பந்தங்களும் இல்லாமலே வெளியேறி யவர்கள் அவர்கள். ஈழத்தமிழர்களில் மிகப் பெரும்பாலானோரின் நிலை அதுவல்ல. யுத்தம் என்கிற ஒரு பெருஞ் சூறாவளிதான் அவர்களை எல்லாத் திக்கிலும் தூக்கி வீசியுள்ளது. இந்த நிலையில் கழிவிரக்கமும் ஏக்கமும் தொடர்ச்சியாகவே இருக்கிறது. எனினும் திரும்பிப் போவது சாத்தியமில்லை என்ற உணர்வு மேலோங்கு கிறபோதும், அல்லது திரும்பிப் போனாலும் நாம் விட்டுவந்த நிலையிலே நமது சூழல் இருக்காது என்று "மாற்றம்" பற்றிய உணர்வு வருகிறபோதும் இருக்கிற வாழ்க்கையை வாழ்ந்து கடப்போம் என்ற நிதானம் வருகிறது. பனிவயலிலும் உழவு செய்து அறுவடையைப் பெறுகிற விடா முயற்சியும் தன் நம்பிக்கையும் உழைப்பும் சாத்தியமாகின்றன. இந்த உணர்வை நுட்பமாகவும் நேர்த்தியாகவும் தன்னுடைய பல கவிதைகளில் கொண்டு வருகிறார் திருமாவளவன். புலம் பெயர்ந்த வாழ்விலும் இலக்கியத்திலும் இது முக்கியமான ஒரு திருப்பமாகும்.

கனேடியக் குடியுரிமை பற்றி எள்ளலும் புன்சிரிப்பும் கூடிய தொனி யில் அவர் எழுதியிருக்கிற "இனி இன்னொரு தேசியன்" என்ற கவிதையிலும் "பனி வயல் உழவு" கவிதையிலும் இந்த உணர்வைத் தெளிவாகப் பார்க்கலாம். ஓடும் புளியம் பழமும் போல ஒரு விடுபட்டதன்மையுடன் வாழ்வை அணுகுவது இந்த நிலையில் சாத்தி யப்படுகிறது. இது படைப்பாக்க உணர்வுகளுள் முக்கியமான ஒன்றெனக் கருதுகிறேன்

www.padippakam.com

காதலை எழுதுவதிலும் திருமாவளவன் நளினத்தையும் மென்மையையும் அழகுறக் கையாள்கிறார். தனது பார்வை வீச்சோடு இணைந்ததாக பெண் பாலாருடைய நோக்கையும் சிந்தித்துப் பார்க்கிற ஒரு முனைப்பு அவரிடம் அரும்பி இருக்கிறது. அவருடைய காதல் கவிதைகளும் கழிவிரக்கத்திலேயே சுழல்வதால் இழப்பும் மெல்லிய சோகமும் அவற்றின் விளைவான ஒரு தவிர்க்கமுடியாமையுமே எஞ்சுகின்றன. கவிஞருக்கு அதுதான் நிகழ்காலமாக இருக்கிறது.
அவருடைய எல்லாக் கவிதைகளிலுமே தெரிகிற சொற்செட்டும், செப்பனிட்ட தன்மையும், நேர்த்தியும் கவிதைகளின் வெளிப்பாடு, மொழி, தொனிப்பு போன்ற அம்சங்களில் கவனமுற்றிருப்பவராகவும் இவை தொடர்பாக நன்கு சிந்தித்து உழைப்பவர் அவர் என்பதையும் துலக்கமாக காட்டுகின்றன. இது மிகவும் மகிழ்வு தருவதாகும். பல கவிஞர்கள் இத்தகைய அக்கறையைக் காட்டுவதில்லை என்பது எனது நெடுநாளைய அவதானம் ஆகும்.

திருமாவளவனுடைய சில கவிதைகள் பலத்த சர்ச்சைக் குள்ளானவை குறிப்பாக சத்திரியம், முல்லைத்தீவு, நச்சுக்கொடி போன்றவை நமது சமகால அரசியலையும் யுத்தத்தையும் தீவிரமாக விமர்சிக்கின்றன. இக் கவிதைகள் எழுப்புகிற ஒரு வகையான எதிர்க்குரலையும் எதிர்ப்புக்குரலையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டியது அவசியமானதாகும். ஈழ யுத்தத்தை நடத்துபவர்களும் சரி, இந்த யுத்தத்தின் பொருட்டு எல்லா அநியாயங்களையும் நியாயப்படுத்துபவர்களும் சரி யுத்தம் தொடர்பாகவும் அதனுடைய தார்மிக சாத்தியப்பாடு வன்முறைகள் தொடர்பாகவும் மாற்றுக் கருத்துக்களும் எதிர்க் குரல்களும் இருக்க கூடாது என்றே ஆணித்தரமாகக் கருதுகிறார்கள்.

இந்த நிலையில் இலக்கியமும் கவிதையும்தான் மாற்றாக ஒலிக்கிறது. இந்த மூன்று கவிதைகளிலும் திருமாவளவன் நுட்பமாகக் கையாள்கிற பாடுபொருள் பாலகர்கள் யுத்தத்தில் ஈடுபடுத்தப்படுவதும், யுத்தத்தின் மற்றும் வீரத்தின் அறம் என்பது என்ன? அப்படியானதொரு அறம் சாத்தியமானதா? என்ற மிகமுக்கியமான விடயமாகும். அரசியல் விஞ்ஞானம், ஒழுக்கவியல், சமூகவியல், யுத்தத்தின் விதி முறைகள் தொடர்பான ஜெனிவா ஒப்பந்தங்கள், சர்வதேச மனித நலச் சட்டங்கள் போன்ற பல துறைகளில் இந்த அம்சங்கள் காலங்காலமாக மீளமீள விவாதிக்கப்பட்டு வருகின்றன. யுத்தத்தை அனுபவித்துக்கொண்டிருப்பவர்கள் என்ற வகையிலும் யுத்தத்தை நடத்திக் கொண்டிருப்பவர்கள் என்ற வகையிலும் கூட எமக்குள் இவை தொடர்பான விவாதங்களோ விமர்சனங்களோ இல்லை என்பது எமது சமூகத்தின் விரிவற்ற, ஒற்றைப் பரிமாணத்தையே காட்டுகிறது. எமது

www.padippakam.com

பத்திரிகைகளிலும் விடிய விடியக் கூக்குரலிடுகின்ற வானொலிகளிலும் அரசியலாரிடமும் பெரும்பாலான அறிவு சீவிகளிடமும் இவை பற்றிய எந்த அக்கறையும் இல்லை என்பது மேலும் விசனம் தருகிறது.

இந்தச் சூழலில் கவிதைக்கூடாக இத்தகைய விமர்சனங்களை எழுப்புகிற திருமாவளவன் மதிக்கப்படவேண்டியவர். இந்தக் கவிதை களை வாசித்துவிட்டு ஆத்திரப்படக் கூடிய தமிழின "உணர்வாளர்கள்" கவிதையில் வெளிப்படுகிற இந்த எதிர்ப்புக்குரலின் ஆவேசத்துக்குக் காரணம், நிகழ்கிற நிகழ்வுகள் பலவற்றின் அநியா-யத் தன்மையினதும் அந்த அநியாயத்தை நியாயப்படுத்த இருக்கிற ஒரு பகுதி மக்களினதும் தொடர்பூடகங்களினதும் விளைவுதான் என்பதை உணரவேண்டும். இந்த ஆவேசத்திலும் கவிஞர் தன்னு டைய அறிவு பூர்வமான அலசலை விலக்கி விடவில்லை என்பதையே அவருடைய கவிதைகள் நுட்பமான முறையில் காட்டுகின்றன.

கவிஞருடைய கருத்துகளோடு உடன் படாதவர்கள் இருப்பதை ஏற்றுக்கொள்ள முடிகிற அதேவேளை கவிஞர் வெளிப்படுத்துகிற கருத்துக்களை வெளிப்படுத்தக் கூடாது என்று வாதிடுவதோ அல்லது இவை போராட்டத்தைக் கொச்சைப் படுத்துகின்றன எனவே ஒழிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்துவதோ நமது சமூகத்தின் நாகரிகத்துக்குப் பயன்படாது. நூறு கருத்துகளும் நூறு கவிதைகளும் மோதுவதுதான் படைப்பும் விமர்சனமும். படைப்பும் விமர்சனமும் இல்லாமல் ஒரு சமூகம் புத்தாக்கமோ புத்தெழுச்சியோ பெற முடியாது.

வீடு - வேலை - வீடு என்று துரித இயந்திர கதியில் சிக்குண்டு பனியிலும் குளிரிலும் உழல்கின்ற லட்சக்கணக்கான மக்களோடு மக்களாக எவ்வித தொழில் பாதுகாப்புமே அற்ற ஒரு சாதாரன தொழிலாளியாக வேலை செய்துகொண்டு கலைப் பிடிப்பையும் கவிதா மனோநிலையையும் புடமிட்டு வருகிறார் திருமாவளவன். புகலிட எழுத்தாளர்கள் பலருக்குமே உள்ள பெருத்த சவால் இது. இந்தச் சவாலை மீறி நாடகம் தருபவர்கள், கலைஞர்கள், இலக்கியகாரர்கள், அனைவருங் கூட நம் காலத்து நாயகர்கள் அல்லவா?

சேரன்.
*cheran@cheran.net*

# நானும் என் கவிதைகளும்

ஊழிப்பெருக்கு
கால வெள்ளம்
கரைபுரண்டு பாய்கிறது

இங்கு நான் யார்?

காட்டாற்றில் சிக்குண்ட
மீன்குஞ்சு
காலத்தின் உக்கிரத்தில்
எதிர் நீச்சலடிக்கின்ற கலகக்காரன்

எனதென்று கொள்ள
என்ன இருக்கிறது?

வித்து வெடித்து முளைவிட்ட மண்ணிலிருந்து
பிடுங்கி எறியப்பட்டு
ஆண்டுகள் பத்தாயிற்று

நான் புரண்ட செம்பாடு
வியர்வையில் குழைத்து எழுப்பிய வீடு
மூலைக்கன்று மா
முற்றத்து மல்லிகை
எஞ்சிக் கிடந்த அப்பாவின் புகைப்படம்
ஊர்சுற்றக் கிடைத்த சைபிக்கில் கட்டை
'சூரன்' நாய்

கால வெள்ளம் எதையெதையெல்லாம்
புரட்டிச் செல்கிறது

கல் செம்பு இரும்பு அலுமினியம்
என ஓடிய காலம்
இன்று செலுலோயிட்டில் நிற்கிறது
பொற்காலக் கனவு
கனாவாகவே போயிற்று

www.padippakam.com

நேற்றைய நண்பன்
இன்று எதிரியாகிறான்
மூச்சுக் காற்று
முழு நஞ்சாய்க் கனக்கிறது
ஓய்வில்லா ஓட்டம்
இரும்பொடு ஒட்டி உழல்கிற வாழ்வு
அவனும் இவனும்
மாறிமாறிக் கொடியேற்ற
பூவும் பிஞ்சுமாய் மடிகிறது
மனிதம்

இங்கு
எனதென்று கொள்ள
என்ன இருக்கிறது

...ம் இருக்கிறது

என் சுயம்
அடிக்கடி எழுகிற கோபம்
அசட்டுத் துணிச்சல்
கொஞ்சம் கர்வம்
ஈகோ
விரக்தி
இயல்பாய் எழுகிற சலிப்பு
வெளியாய்த் திறந்த மனது
துளியளவு நம்பிக்கை

இதைவிட்டால்
கொஞ்சம் கவிதைகள்
நான்காண்டுகள்
நான் கொஞ்சி விளையாடிய கவிதைகள்
இன்றோடு இவையும் போகிறது

நாளையைப் புதிதாய் தரிசிப்பேன்

நன்றி.

திருமாவளவன்.
(புகலிடத்திலிருந்து)
*90 Eastdale Ave. #1401, Toronto, ON, M4C 5A2, Canada*
*kudil35@hotmail.com*



படிப்பகம்

www.padippakam.com


முந்நூறாண்டுகள்
உழுதோம்
எங்கள் நிலத்தை அவர்க்கு

இனியும்
உழுவோம்
அவர்கள் நிலத்தை அவர்க்கே



படிப்பகம்

www.padippakam.com



# தேடுகை.

புலரிப் பொழுதில்
புறப்பட்ட பயணம்
கூடு
திரும்பவில்லை



படிப்பகம்

www.padippakam.com

வழிகாட்டிகளெல்லாம்
தறி கெட்டலைய
சூரியனைக் குறிவைத்து
நகர்த்திய தேடல்
தரிப்பின்றித் தொடரும்
படுவான் திசைபார்த்து

காட்டில்
கடல் வெளியில்
கரிசல் காட்டு அகதி முகாம்களில்
முகமிழந்த கடவுச்சீட்டில்
சரக்குக் கப்பலின் அணியக்கிடங்கில்
பனியில்
பனிநிறை புலத்தில்
பன்மொழிக் கலப்பில்
துருவக் கொடுங் குளிரில்

இவைகள்
தரிப்புகள் அல்ல
தடங்கள்

எப்போது
நான் வீடு சேர்வேன்?


இப்போதும்
சூரியனைத் தேடியபடி.

●●●



படிப்பகம்

www.padippakam.com



# பரதேசியின் பாடல்

நான்
பரதேசிப் பாடகனானேன்

மூசிவீசும் பனிப்புயலுக்கு
முகங்கொடுக்கும் வித்தையும்
எனக்கிப்பொழுதில்
அத்துபடி

விறைத்துக் கிடக்கும்
மூங்கில் துளைகளில்
நுழையுமென் மூச்சுக்காற்று
ஊதல் குளிரையும்



படிப்பகம்

www.padippakam.com

ஒருகால் உருக்கும்
என் தேசமும் அந்த நாட்களும்
காலாற நடந்த மாலைப்பொழுதுகள்
தோழரோடு அலைந்து
காயப்பட்ட நினைவு
இரும்புகள் துரத்த
கடல்தாண்டி
பின்
பிடுங்கி எறியப்பட்டு
துருவப் புலத்தில் வீழ்ந்தநாள்
இவை
தூசிபடிந்த தடங்களாய்
இடையிடை துலங்கும்

குளிர்வாடை
தென்றலைப் புணர்ந்து
சோளகப் புழுதியிற் பூத்த
தேசம்

நீளத் தள்ளிய பனங் குடலைகள்
அதில் சீவிக்கொணர்ந்த புதுக்கள்ளின்
தித்திப்பு

வீதி நீள இருபுறமும்
முடிந்து பொத்திவைத்த
ஊர்மனைகள்

நாட்டார் பாடலிலும்
மோடிக்கூத்திலுமாய்
கூடிக் கரைந்த இரவுகள்

பச்சை வயல்கள்
பாடுமீன் வாவிகள்
தேயிலை போர்த்திய தேசக் கொங்கைகள்
கொழுந்து கொய்தே வலிந்த கரங்கள்

இவைகளினூடே
தடம்பதித்த சந்ததி.
சுவடிக் கதையாய்ப் புதைந்து போயிற்று



*திருமாவளவன்*

படிப்பகம்

www.padippakam.com



மனிதனைத் தேடினால்
சுதந்திரம் என்னை முத்தமிடுமென்ற
உண்மை தெரியாதபோது
உருட்டினான் பகடையை
ஆயுதத் தரகன்

புல்நுனிகள் பூத்த பூமியெல்லாம்
பனைமரங்களைத் தறித்து நாட்டி
தென்னங் குடலையைத் தோரணமாக்கி
மந்திரம் ஒலித்து
சுடுகலன் சுமந்து வேள்வி செய்தோம்
ஆகுதியானவை
என் இளம் பிஞ்சுகள்

இன்று
முகவரியிழந்து
மூலையில் நின்று
மொழிக்குள்
முகம் புதைக்கத் துடிக்கின்றேன்
சோர்ந்து விழும் போதெல்லாம்
மீள எழுகின்றேன்

உரக்கப் பாடுகிறேன்
உன்செவியில் விழுகிறதா?

●●●

www.padippakam.com



# க்ஷத்திரியம்

வேட்டையாடல்
சத்திரியர்க்கு அறம்
வீரர்க்கு இலட்சணம்

நாம் சத்திரியர்
வேட்டையாடலாம் புறப்படு
பிடி
ஒரு மனிதனை
அவன் தோளில் தொற்றிக்கொள்
அவனிடம் உள்ளதை அறி
சாதி மதம் மொழி இனம்
அல்லது
ஒருத்திக்காய்
இருவர் முரண்படல் கூடும்

ஏதாவது ஒன்றிருக்கும்
இல்லாவிடில்
புகட்டு; வெறியூட்டு
புறப்படு வேட்டைக்கு
அவன் உடலிலெல்லாம் குண்டுகளை
புதை
கட்டளையிடு
களங்காண



படிப்பகம்

www.padippakam.com

கோவிலில் திருவிழா
மசூதியில் தொழுகை
பிரித்தில் லயித்திருக்கும் விகாரை
நகரின் கேந்திரமையம்
பஸ் நிலையம்
சந்தை
பாலராய் இருந்தாலென்ன பாடசாலை
அல்லது
வைத்திய நிலையம்

எதுவாயிருந்தாலும் நேரம்
முக்கியம்
மனிதர் கூடும் நேரம்

இயக்கு
குண்டுப் பிண்டம் வெடிக்கட்டும்
பாலர் பெண்டிர் கர்ப்பிணியர்
வயோதிபர் பாவியர் வழிப்போக்கர்
குழந்தைகள்
குருதியில் குளி
குடித்து மகிழ்
நிணம் புசி

அடுத்தவன் தோளில் ஏறிக்கொள்
அவனை ஏற்று
போர்விமானத்தில்
போதுமான அளவு
குண்டுகளை நிரப்பிக் கொள்
செலுத்து வான்பரப்பில்
உற்றுநோக்கு
மனித நடமாட்டம் தெரிகிறதா
நாலுபேர் கூடிநின்று பேசுவது
பள்ளி முன்றலில்
சிறுவர் கூடி விளையாடுவது
அல்லது
உன் வருகைகண்டு
ஆலயத்துள் தஞ்சம் தேடுவது



படிப்பகம்

www.padippakam.com

எதுவாயிருந்தாலும்
எண்ணிக்கையை கருத்தில் கொள்
செலுத்து குண்டுகளை
நொருங்கிச் சிதறட்டும்

வேட்டையின் வெற்றியில்
களிப்புற்றிருக்கிறாயா?
வா
வட்டமாய் அமர்ந்துகொள்
பேசுவோம்

வேட்டை பற்றி
வேட்டையின் விருந்து பற்றி
களைப்பாற அருந்தும் மதுவின்
சுவை பற்றி
மகிழ்விக்க ஆடும் மங்கையின்
அழகு பற்றி
அமைதி பற்றி
சமாதானம்
மற்றும் நிவாரணம் பற்றி
உலக நிலவரம் பற்றி
பேசுவோம்
களைப்பாறும் வரை

எக்கணமும்
தூக்கம் மறந்திரு
மீளக் கிளம்ப வேண்டும்

வேட்டையாடல்
சத்திரியர்க்கு அறம்

●●●



படிப்பகம்

www.padippakam.com



## நச்சுக்கொடி

அழு பெண்ணே அழு
உன் ஒப்பாரிப்பாடல்
ஏழு கடல்தாண்டி
எழுகிறது
என்செவியில்

ஊரடங்கு அமுலிருந்த
நடுஇரவில்
உன் வயிற்றில்
வலியெழுந்தபோதில்
வீழ்ந்த அலறல்
இன்றும் அதிர்கிறது
செவியில்



படிப்பகம்

www.padippakam.com

அன்று
கோடிப் புறத்து
எலுமிச்சை அடியில்
தாட்டுவிட்ட நச்சுக் கொடி
மண்ணில் கலந்து மடிந்திருக்க
வாய்ப்பில்லை

ஏணையிலே கிடத்தி
நீ படித்த தாலாட்டும்
ஏணை கட்டுதற்கு
வீட்டு கோப்புசத்து விட்டத்தில்
கொழுவி விட்ட
தேடாவடக் கயிறும்
நினைவில் முட்டுதடி
இன்றும்

கண் மூடி விழிக்கு முன்னெழுந்த
கணப் பொழுதுள்
களத்துள் பாய்ந்து
வெடித்து சிதறி
காற்றில் கலந்து விட்டான்
உன் பாலன்

கட்டிப்புரண்டு
கதறி அழுகின்றாய்
நீ
என்ன செய்வாய்

வெடிவால் முளைக்கு முன்னர்
அழைத்து
மூளை நீக்கி
கபாலத்தைக் கோதாக்கி
சலவையிட்டு
துடைத்து
வெடிமருந்தை நிரப்பி
ஏவி விடும் கலையும்
மாவீரம் செய்கின்ற
வல்லமையும்
வாய்த்திருக்கு
அவர்க்கு



அழு பெண்ணே
அழு

மாவீரமென்று
சோகத்தை புதைத்து
வெதும்பத் தெரியாத
பேதை நீ
அழு

உன் பிள்ளைக்காய்
முற்றத்தில் தவழ்கின்ற
குழந்தைக்காய்
ஒழுங்கையில் நடக்கும்
கர்ப்பிணி வயிற்று சிசுவுக்காய்
ஆயதக் குதங்களில் நிரவி வழியும்
ஆயிரக்கணக்கான சிறுவருக்காய்
அழு

உன் ஒப்பாரிப் பாடல்
எட்டுத்திக்கும்
ஒலிக்கட்டும்

●●●

www.padippakam.com



# எட்டாமல் போன எனது

சூரியனைப் பிடித்து
சட்டைப்பைக்குள் திணித்துவிட்டேன்
இப்பொழுது
மின்மினியைத் தேடிக்கொண்டிருக்கிறேன்

நேற்று
என்னோடு கூடியிருந்து
கண்ணாமுச்சியாடிக்
களி கொண்டலைந்த
மின்மினி
எங்கே மறைந்தது
இன்று?

சூரியனின் ஒளிப்பிரவாகத்தில்
மின்மினி
கண்ணுக்கு புலப்படாதென்கிறார்
சிலர்
சூரியத்தகிப்பில்
மின்மினி பொசுங்கிவிடுமென்கிறார்
வேறுசிலர்
சூரியனிருக்க
மின்மினி எதற்கு என்கிறார்
இன்னும் சிலர்

www.padippakam.com



எதுவாயிருந்தாலும்
எனக்கு மின்மினி வேண்டும்
அது இல்லாமல் தூக்கம்வர
மறுக்கிறது

நானிப்பொழுது
சூரியனைக்கூடப் பிடுங்கியெறியத் தயார்
ஆனால் சூரியன் விடுவதாயில்லை
அதன் கதிர்கள்
என்னுள் பரந்து
வியாபித்துக்கிடக்கின்றன

என் தேசத்தில்
ஆயுதங்களைப் போல.

●●●



படிப்பகம்

www.padippakam.com



# பனிவயல் உழவு

கோழிகளின் கூவல்
கோவில் மணிகளின்
தொழுகை அழைப்பு
இரண்டுமற்ற அம்மணக் காற்றில்
நுழைந்தது காலை

அலாரத்தின் அதட்டலிலே
துயில் கலையும்
இதழ் பிரிய மறுத்து
இமை துவளும்
காதல் ஸ்பரிசம் தேடி கரம் நீண்டு
வெறுமையிலே வீழும்
நடைப்பிணமாய் நானெழுந்து
சாளரத்து துகில் களைய
துலங்கும் நகர்

காமக்கிழத்தியென
இருளாடை களைந்து வெண்பனி
உள்ளாடையுள்
எடுப்பாய் உடல் வனப்பு காட்டும்
ரொறன்ரோ நகரி



படிப்பகம்

www.padippakam.com

உடல் தழுவிக்
காமக் கிறக்கத்தில்
சலனமற்று கிடக்கும்
ஒன்ராரியோ நீர்வாவி
கட்டில் விளிம்பில்
விடிவிளக்கென
நாணிக்கிடப்பார் சூரியனார்

துருவக் கொடுங் குளிரில்
அலைகின்ற சூரியன் நீ
ஆயுதந் துரத்த
நெடுந்துயர் கடந்த
பரதேசி நான்
உனை யார் துரத்த
இங்கு வந்து அகதியானாய்?

முகமலம்பி
சூடாய் தேநீர் அருந்தி
வீதியிலிறங்க
போர்ச்சன்னதமிடும்
பனிப்புயல்

போர்
தவிர்த்து
நீள்பயணம் நடந்து
நெடுநாள் கழிந்தும்
காலடிக்கீழ்
பெருநிழலாய்த் தொடர்கிறது
போர்

கால்கள் விரவும் அவலங்கண்டு
பனிதொங்கப் பைன்மரங்கள்
பல்லிளிக்கும்

தெருமுனைப் பொட்டல் வெளியில்
பறவைகட்கு உணவூட்டி சுகித்திருக்கும்
வெள்ளைத்தோல் மூதாட்டி
'ஹலோ' சொல்வாள்
எனைப் பார்த்து



படிப்பகம்

www.padippakam.com

உணவு பொறுக்கும் ஆவலில்
ஆலாக்கள் குரலெழுப்பும்
புறாக்கள்
அழகு நடை பயிலும்
இவற்றிடையே
தன்னினத்தை
கூவிஅழைக்கும்
எம்மூர்க் காகங்கள்

மாலை
எந்திரம் பிழிந்து துப்பிவிட
உடல்மீளும்

தெருமுனை
பொட்டல் வெளி
எங்கும் மொய்த்திருக்கும்
மழலைக்கூட்டம்

தாமிர பொற்கூந்தல்
கருமணி சுருட்டைமுடி
மஞ்சள் முகத்தில்
குறுகி சிறுத்த கண்கள்
எதியோப்பிய மீன்விழிகள்
இவர்களோடு
கை கோர்த்து மகிழ்ந்திருக்கும்
எங்கள் இளசுகள்

மின்மினி உடுத்திய
தொறன்ரோ நகரி
மத்தியில்
எழுந்து
உயர்ந்து நிற்கும்
சீ.என்.கோபுரம்

●●●



படிப்பகம்

www.padippakam.com



# மனிதக் காட்சிச்சாலை

கொடுங்கோடை
வெய்யில் கொளுத்த
கொளுந்தெரிந்த தேசம்

மூட்டை முடிச்சுகளோடு
முகங்களை மாற்றினோம்

கழுதைக்கும் மனித முகம்
தெரு நாய்க்கும் மனித முகம்
பன்றிக்கும் கரடிக்கும் குரங்கிற்கும்
பறவைக்கும் பச்சோந்திக்கும்
பல்லிக்கும் அதுவே
மனிதரும் கூட
தங்கள் சொந்த முகங்களை அழித்து
இரவல் முகங்களை
எழுதிக்கொண்டோம்

www.padippakam.com

படர்ந்தோம்
புலம் பெயர்ந்து
உலகின் திசைகள் பதினாறிலும்

மனிதர் கனத்து
சமநிலை கெட்டது உலகு
மாற்றிய முகங்களை
பிடுங்கி எறிந்தோம்

மீள
இயல்பு தோன்றிற்று

பிறகென்ன
கூட்டம் கொண்டாட்டம்
குழி பறிப்பு குழையடிப்பு
கோவில் சடங்கு சங்காரம்
சந்திச் சண்டித்தனம்
குரங்காட்டம் கரடி வித்தை
எல்லாம்

பிறகென்ன
மீள
இயல்பு தோன்றிற்று

துருவம்
இப்போது பனி பொழிய
மறுக்கிறது
மடிபெருத்து
வீதியில் அலைகிறது
மிருகம்

தப்பித்துக் கொண்டனர்
புத்தி தெளிந்தவர்

அகப்பட்டது
அப்பாவிகளும் நானும்.

●●●



படிப்பகம்

www.padippakam.com



# தீ

கொடுங் குளிர்
நேற்று முழுவதும்
உலாவித் திரிந்த காற்று
உருக் கொண்டெழுந்ததில்
குலையும் உறைகிறது

துருவேறிக் கனக்கிறது
மனது

அன்று ஆடிமாசம்
நானும் விடலை
சோளகமும் விடலை
பேய்க்காற்றில்
சதிராட்டம் போடுகின்றன உயரிப் பனைகள்

காற்றுக்(கு) அஞ்சி
வீட்டினுள் கிடந்தால்
உடலினை பற்றாதோ பஞ்சி?



படிப்பகம்

www.padippakam.com

இறுகக் கட்டிய கொடுக்கு
கச்சைமேல்
இறுக்கிக் கிடக்கிறது
இயனக்கூடு
மாரிலே ஏறுபட்டி
தடநார் வளையத்துள்
கால் நுழைத்து
உதைத்து
ஏறி
வகுத்து
வட்டுள் நுழைந்து
சீவி வருகிறேன்
நொடிப் பொழுதுள்

சுரைக் குடுவையை நிறைத்திருக்கிறது
புதுக் கள்ளு
அத்தனையும் தித்திப்பு

எத்தி
குளவி நுரை தள்ளி
பிளாவில் நிறைத்த
ஒற்றைப் பனைக் கள்ளின் சுவையில்
கிறுகிறுத்துப் போகிறேன்

இன்று
முற்றத்துக் கிளுவையிலே
கொளுவி விட்ட
முட்டி
நார் இற்று வீழ்ந்து
நொருங்கிப் போயிருத்தல் கூடும்
தலை வாசல் தாழ்வாரத்தில் விட்டுவந்த
இயனக் கூட்டுள்
துருவேறி முனை மழுங்கி
கிடக்கும்
பாளைக்கத்தி

எல்லாம் இழந்தோம்
எல்லாமும் இழந்தோம்



படிப்பகம்

www.padippakam.com



இழப்பில்
என் வர்ணம் மறந்திருந்தேன்
மீளத் தொடர்ந்து
மரச்சிணி போல்
நாறி
கனன்று எரிகிறது

துருவேறிக் கனக்கிறது
மனது

தீட்டுக் கட்டையில்
சட்டியோட்டை நொருக்கி
துகளாக்கி
பாளைக் கத்தி
பளபளக்கத் தீட்டி
கூர்பார்க்க அரிப்பெடுக்கிறது
கை

பனையில்லை என்றால்
என்ன?

●●●



படிப்பகம்

www.padippakam.com



# பற்றை இலைக்கஞ்சி

மூன்று நாட்கள்
மூடிக்கிடந்தது
வானம்

மழையும் குளிரும்
காற்றில் புணர
மூசிக் கொட்டிற்று
வெண்பனி

முடங்கிக் கிடந்தன
மனிதரும் உலகும்

சூத்திர ஒழுக்கில்
ஒழுகிய
உடலில்
பிணியாய் படர்கிறது
ஒய்வு

கண்ணீரில் கரிக்கிறது
உப்பு



திருமாவளவன்

படிப்பகம்

www.padippakam.com



இளமையை வறுமை
மேய்ந்த காலை

வானம் உடைப்பெடுத்து
பொழிகிறது மாரி
அடைமழை

வளவை நிறைத்திருக்கிறது
வெள்ளம்
வயிற்றை நிறைத்திருக்கிறது
பசி

ஒழுக்கு வீட்டின்
திண்ணை மூலையில்
ஒதுங்கியிருக்கிறோம்

பரணிற் கிடந்த
தாய் மூடல் பெட்டியுள்ளே
எஞ்சியிருக்கிறது
ஒரு சிறங்கை அரிசி

மழை ஓய்ந்ததோர் துளிப் பொழுதுள்
எட்டி நடந்து
வெட்டை பற்றையில்
பற்றி
படர்ந்திருந்த
முசுட்டையிலை
கொவ்வையிலை



படிப்பகம்

www.padippakam.com

மழைநீர்ச் சுமையில்
ஒடிந்து விழுந்த
முற்றத்து முருங்கையில்
உருவியெடுத்த
ஐந்தாறு
முருங்கையிலை

இவற்றோடு
புளியின் சுவை
சுண்டச் சேர்த்து
கஞ்சி காய்ச்சித் தருகிறாள்
அம்மா

அடுக்களையில்
சுற்றி சூழ்ந்திருந்து
பருகி மகிழ்கிறோம்
நானும்
இளவல்கள் நால்வரும்

இன்று
இருண்ட கண்டத்தில்
அவளறியாதோர் மூலையில்
மூப்புப் பிணியோடு
பார்த்திருக்கிறாள்
அம்மா

துருவப் பனிக்கொதுங்கி
சாளரத்து ஓரத்தில்
காத்திருக்கிறேன்
நான்

இன்னமும் எதை வேண்டி
தொடர்கிறது
போர்?

●●●



படிப்பகம்

www.padippakam.com



# வாடாமல்லி -1

என் குடில் இழந்து
பனி வயற் காட்டில்
குடி பெயர்ந்தேன்

கூடவே என்னோடு
மல்லிகைச் செடியொன்று
கூடத்தின் உள்ளே
சாளரத்தின் ஓரத்தில்
சட்டியிலே கால் பதித்து
பூவின்றிக் காத்திருக்கு

துருவம் பனி சொரியும்
மல்லிகைப்பூ இதழாய்
நினைவு நனையும்

அன்று
வாலிபத்தின் முறுக்கு என்னில்
யௌவனத்தின் பூரிப்பு
உன்னில்



படிப்பகம்

www.padippakam.com



முற்றத்து மாமரத்தில்
நீளக் கொடிபரப்பி
நிரவிப் பூத்திருக்கு
மல்லிகை
முதிர்ந்த அரும்பு தெரிந்து
நீளச்சரம் தொடுத்து
தருகிறேன் நான்
தலையில் சூடி
மகிழ்கிறாய் நீ
கீழ்வானில்
நாணிச் சிரிக்கிறது நிலவு

காலக்கடல் அலையில்
கரைந்து போகிறது
கட்டியவீடு
இன்று
நினைவுகள் மட்டும்
நெருஞ்சியாய்


எப்போது
இதழ் விரிக்கும்
என் கூடத்து மல்லிகை?

●●●



படிப்பகம்

www.padippakam.com



# வாடாமல்லி -2

வெண்பனித் துகிலுள்
மோகித்துக் கிடக்கிறது
துருவம்
நிலவு மெல்ல இறங்கிவந்து
பனிவயலில்
மேய்கிறது

நான்
மோனத்துள் கிடக்கிறேன்
ஒரு கவிதைக்காய்

நிலவும் அவளும் கூடிக்
கொலுவிருந்த
அன்றொரு பொழுதில்
எழுதொரு கவிதை
என்கிறாள் தோழி



படிப்பகம்

www.padippakam.com

மொழியும் உணர்வும் ஊறிப்
பிரவாகித்த
அன்றைய இரவில்
மரபின் தளைகளுக்குள்
கட்டுண்டு அழிந்து போகிறது
என் கவிதை

மரபின் தளைகளை மீறி
சுயமாய் கவி புனையும்
இன்றைய பொழுதில்
நான்
மோனத்துள் கிடக்கிறேன்
ஒரு கவிதைக்காய்


ஒரு பத்து ஆண்டுகளை
இரைமீட்டு தள்ளி விட்டு
எதைக் காத்துக் கிடக்கிறது
காலம்?
துருவத்தின் உடல் மேல்
மெல்ல மேய்ந்து வருகிறது
நிலவு

எல்லாம் இருக்கிறது
ஆனால்
கவிதை கேட்ட அவள்?

●●●


படிப்பகம்

www.padippakam.com



## வாடாமல்லி -3

அலைமோதும் கூட்டத்தில்
அவள் முகந்தேடி அலைகிறது
மனது


அன்றொரு துளிப்பொழுதில்
என்னில் ஒன்றி
கவர்ந்து
காதல் மொழிந்து
பின்
விடை பெறாமல்
விட்டுச் சென்றவள்
அவள் முகந்தேடி அலைகிறது
மனது

தெரு சந்தடியில்
கோவில் நெரிசலில்
விழாக் கூட்டத்தில்
சினிமாக் கொட்டகையில்
பிரயாணக் கும்பலில்
திடீரென
நினைவு விழித்து
அவளோ
என எண்ணித் துடிக்கிறது



படிப்பகம்

www.padippakam.com



புணரும் இரு கரு அரவென
புட்டம் தாண்டி நெளிந்த கூந்தல்
உதிர்ந்து நரைமேய்ந்து
விழி சூழ கருவளையம் படர்ந்து
ஊளைச் சதை தொங்க
தோல் செத்து
நிமிர்ந்த முலை தளர்ந்து
அவள்
அழகும் அடையாளங்களும்
வீழ்ந்து
அழிந்திருத்தல் கூடும்


நினைவுகள் மட்டும்
யௌவனமாய் எழுகிறது
இன்றும்
அலை மோதும் கூட்டத்தில்
அவள் முகந்தேடி

●●●



படிப்பகம்

www.padippakam.com



# என்னுள் உறங்கும் சொப்பனம்

காலம் தலை மீது
நரையைக் கிறுக்கிவிட்டு செல்கிறது
என் பயணம்
நடுவைத் தாண்டி விட்டதற்கான
எச்சரிக்கைச் சமிக்ஞை
கிடைத்தாகிவிட்டது
இனியும் நான் தாமதிக்கமுடியாது
இன்றோ நாளையோ
அல்லது
சில நாட்கழித்தோ
நானிறங்குமிடம் அண்மித்தல் கூடும்

அதற்குள்
என்னிடமுள்ளதை
உரியவனிடம்
ஒப்படைத்தாக வேண்டும்



படிப்பகம்

www.padippakam.com

இதுவரையில்
பல தரிப்புகளைத் தாண்டிவிட்டேன்
எண்ணிலடங்கா பயணிகளை
சந்தித்துள்ளேன்
என்னிடமுள்ளதை
ஒப்படைக்கத் தகுந்தவராய்
யாரும் அகப்படவில்லை

பலர் ஏறினர்
பலர் இறங்கினர்
சிலர் எனைத் தாண்டிச் சென்றனர்
வேறு சிலர் அருகிலிருந்தனர்
ஓரு சிலர் புன்னகைத்தனர்
இன்னும் சிலர்
முகம் சுழித்தனர்


எல்லோரிடமும்
பயம் பதட்டம் பரிதவிப்பு
பணம் தேடும் அலைச்சல்
அவசரம் ஓட்டம்
ஒருவருக்காவது பொறுமையில்லை
ஓரு துளிப் பொழுதுகூட
நின்று கேட்க அவகாசமில்லை

என்னிடம் உள்ளதொன்றும்
பெரிய பொக்கிசமில்லை

எதுகை மோனை சீர் சந்தம் என்ற
அனாவசியச் சடங்குகளை
விலக்கிக்கொண்ட
இந்த நூற்றாண்டின் கவிதையைப் போல
ஒரு கையகலச் செய்தி
சிறு தீப்பொறி

யாராவது ஒருவனுக்கு உதவக்கூடும்
அதிலவன்
பீடித்துண்டைப் பற்றவைப்பானா
அடுப்பைப் பற்றவைப்பானா
அல்லது
உலகில்
புரட்சித்தீயை மூட்டுவானா?

www.padippakam.com



அது அவன் ஆளுமை பற்றியது
எனக்கு அவசியமில்லாதது

ஆனாலும்
அதனருமை புரிந்தவனுக்கு மட்டுமே
கொடுக்க என் மனமிசையும்.
தெருவில் நின்று
தீப்பெட்டி கேட்பவன் போல்
பயணம் முடிவதற்குள்
யாரோ ஒருவர் சந்திக்கக்கூடும்

அவருக்காய்
காத்திருப்பதில்
சந்தோஷித்திருப்பேன்

●●●



படிப்பகம்

www.padippakam.com



# நுகத்தடி மனிதர்

புகைவண்டியென நீண்டு கிடக்கும்
நகரத் தொடர்வீட்டு கட்டடத்தில்
நம்மவர் உறையும்
கூடு

இலையுதிர்த்துப் பனியுடுத்திய
மரங்களூடே எழுவான்
சூரியன்

பாதாள அறையிருந்து
மேற் கிளர்ந்து
செவி கிழிக்கும்
குறட்டையோசை

ஞாயிறின் காலை


சிகரெட் சாம்பரில் மூழ்கிய வட்டிலும்
பியர் போத்தல் எச்சங்களும்
குலைத்துப் போட்ட சீட்டுக்கட்டும்
குண்டடிபட்ட ஈழக்கிராமத்து
காட்சிப் புலமென விரியும்
முன்கூடம்



*திருமாவளவன்*

படிப்பகம்

www.padippakam.com



சூத்திரக் கிணற்றை
சுற்றிப் பழகிய மாடென
இயந்திர வாழ்வழுத்த
அவல நுகத்தடி விலக்கி
கூடிக் கரைந்த
நேற்றைய இரவின் சாரலில்
நனையும் மனசு

பால்ய வயதுப் பகிடிக் கதைகள்
நம்மவர் புரியும் நாட்டு நடப்புகள்
வெட்டிப் பேச்சு
வெடிச் சிரிப்பொலி

வீடு நிறையும்

நடுநிசி தாண்ட
போதையேறி ஊரிலூரும்

வயல் வரப்பில்
வடலி வெளிகளில்
பூநாறிப் புதர்களில்
காணாமல் போனவர்கள்
நினைவு உறுத்தும்

செம்மண் வெளியெங்கும்
கல்லறைகள்
விளைகின்ற கொடுமை
கண்ணில் கசியும்



படிப்பகம்

www.padippakam.com

இடையே
என் வாலிபக் காலக்
காதல் கவிதையொன்றை
பாடுவான் நண்பன்
உயரக் குரலெடுத்து

நாளை மீளும்

கடன் தந்தவனின் வட்டிக் கணக்கும்
கிரடிட்காட் நிலுவையும்
'பெல்கனடா' வின் சிவப்புச் சிட்டையும்
கண்ணீர் கரைத்து வந்த
அம்மாவின் கடிதமும்
தங்கையின் வயதும்
தம்பியின் கானற்கனவும்
சுமையாய் இறங்கும்


மீளத் தலை
மீளும்
நுகத்தடிக் கீழ்.

●●●



படிப்பகம்

www.padippakam.com



# பொங்கல்

குறைமாதச் சிசுவைப் போல
வந்து போனது
பொங்கல் திருவிழா
கொடுங் குளிர் நாளொன்றில்

முகில் கூட்டத்துள் உறைந்து போனான்
சூரியன்
ஏறும் தேரும்
ஏழு குதிரைகளும்
எங்கேனும் அனாதரவாய்
கிடத்தல் கூடும்
என்னைப் போல்

இருட்டில் எழுந்தேகி
இரும்பொடு மாய்ந்து
இருட்டிலே மீளும் எனக்கெல்லாம்
இரவுப்பொங்கலே
இனிதாகும்



படிப்பகம்

www.padippakam.com

பசுஞ்சாணி
மாக்கோலம் மாவிலை மஞ்சள்
தோரணம்
புத்தாடை புதுப்பானை புதிரரிசி
பட்டாசு
அத்தனையும் மனதிருத்தி
அடுப்பேறும் பழசு

பசுஞ்சாணியென்றதுமே
'ஷிட்' என்று முகம் சுழிக்கும்
என் மழலைகட்கு
எப்படி எடுத்துரைப்பேன்
பொங்கல் தத்துவத்தை?

நாளையொருகால்
பொங்குதலென்பது
பொருளறியாச் சடங்காகி
நிகழுதல் கூடும்

புகலிடத்தில் பொங்குதல் எப்படி?

எதற்கும் நன்று
புத்தகமொன்று
புகலிட மொழியில்
வெளியிட்டு வைத்தல்
இன்று

●●●



படிப்பகம்

www.padippakam.com



# அவளுடன் மூன்று பொழுதுகள்

இன்று
எதிர்பாரா நிகழ்வொன்றில்
அவளை நான் சந்தித்தேன்.

முன்னொரு காலை
வேனில் நாளில் நிகழ்ந்தது
அவளுடனான முதற்சந்திப்பு
விடுமுறை கழிக்க
ஊருக்கு வந்திருந்தாள்

அவள் குறும்பில்
குறுநகை விரிப்பில்
குறுகுறு விழி மொழிக் கதைப்பில்
குதூகலக் கூச்சலில்
கூடிக் கழிந்தது விடுமுறை

திரும்பிய பின்பும்
அவளது நினைவில்
சிலநாள் நனைந்தேன்



படிப்பகம்

www.padippakam.com

பின்னொரு பொழுதில்
கார்த்திகை நாளில்
கண்டதாய் நினைவு

சேலை போர்த்திய உடலும்
தாலியின் சுமையில்
தாழ்த்திய தலையுமாய்
கணவனின் பின்புறம்
கைகட்டி நின்றாள்

கண்மடலோரம் தேங்கிய நீரும்
உதட்டுச் சரிவில் நழுவிய நகையும்
உயர்த்திய விழியில் துயர மொழியும்

மௌனமாய் மறைந்தாள்

இன்று காலை
எதிர்பாரா நிகழ்வொன்றில்
அவளைச் சந்தித்தேன்

கொடுமழை கடந்து
தெளிந்த வானில்
தெரியும் பறவையாய்
சிலிர்த்து நடந்தாள்

வினாக்குறி தொக்க
விழிகளை உயர்த்தினேன்

திருமணம்
அடிமை சாசனமல்ல
சடங்கு
ஒப்பந்தம்
ஒப்பந்தங்கள் மீறப்படும்போது
விலகலென்பது....


விளங்கிக்கொண்டேன்
அவள் விலகி நடந்தாள்
பல யுகங்களின் தடங்களை
விலக்கியபடியே.

●●●



படிப்பகம்

www.padippakam.com



# ஆறாம்பூதம்

நான்
உன்னால்
உருவாக்கப்பட்டவன்
உனையே ஆளும் சர்வாதிகாரி



படிப்பகம்

www.padippakam.com

நானே தேவன்
ஆக்கல் தொழிலுக்காய்
படைக்கப்பட்டவன்
ஆனாலும்
நான் நடத்துவதோ
ஊழிக் கூத்து
உருத்திர தாண்டவம்
அழித்தலே என் அவதாரத்தின்
தாற்பரியம்

நான் .அரக்கன்
பஞ்சபூதங்களின் புத்திரன்
ஆறாம்பூதம்
ஆகாயவெளியில் ஆர்ப்பரித்தெழுவேன்
வையத்தைத் துளைத்து
ஆழியைக் கடைவேன்
ஒருகணப்பொழுதில்
பிரபஞ்சத்தையே பொசுக்கிடுவேன்

பூமியை பிளந்து முளைத்தெழும்
விஷவித்து நான்
வானில் தோன்றும்
தூமகேது


இப்பொழுது
என் சொருபம் புரிகிறதா?

●●●



படிப்பகம்

www.padippakam.com



# ஆறு

சுரணையிழந்து
ஓடிக்கொண்டிருக்கிறது ஆறு
இன்றைய
எனது நாளைப் போல



படிப்பகம்

www.padippakam.com

கரையோரம்
வேரறுந்து நீர்தொட்ட
உச்சாணிக் கொம்பிருந்து
கரைகிறது குருவி
கண்ணீர்
உறைகிறது குரலில்

சலசலத்து நீரோட
மரந்துளிர்த்துப் பூப்பூக்க
துணை தேடிக் கூடுகட்டி
கலவி கொண்டு
கருத்தரித்து
காத்திருந்து
உணவூட்டி மகிழ்ந்திருந்த
குருவி

எங்கோ தொலைவில்
வானிடிந்து கொட்டிய கொடுமழையில்
கரைபுரண்டு நீரோட
வேரறுந்து மரம்வீழ

கரைகிறது குருவி
கண்ணீர்
உறைகிறது குரலில்


ஓடிக்கொண்டிருக்கிறது ஆறு
நகரும்
என் நாட்களைப் போல

●●●



படிப்பகம்

www.padippakam.com



# இருள்வெளிப் பயணம்

1.
முற்றி நிறமேறிப் பழுப்பெறிந்து
இலையுதிர்த்துக் காத்திருக்கு
காலம்

நீர் ஊர்ந்து கல்தேய்ந்த சிற்றோடைத்
தடம் துலங்கப்
பனிமுடும்

வாழ்க்கை
எளிதல்ல எப்பொழுதும்

நேற்றைய நினைவிலும்
நாளைக் கனவிலும்
வெறுமையாய் கரைகிறது
இன்று

ஒரு புதிய நூற்றாண்டின்
மைல்கல் தாண்டி நகர்கிறது
காலம்



படிப்பகம்

www.padippakam.com

2
முட்டி மோதி இடியுண்டு
ஒன்றின் புட்டத்துள் மற்றொன்று
முகம் நுழைத்து
கண்மூடி
போகிற போக்கில் மூசி
அடிவேர் கடித்து
சலம்விட்டு
அதிலேயே புழுக்கையிட்டு
விரையும் மந்தை கூட்டம்

வெகு இயல்பாய் விரட்டி
ஒன்றாக்கி
நடத்திச் செல்கிறான்
இடையன்

ஏன்?
எங்கு?
எதற்காய்?
என்பதறியா
இருள்வெளிப் பயனம்

காலத்தின் திசையில் அலைகிற
கூட்டத்தை விலக்கி
தனிக்க முயலும் அருந்தலொன்றை
சவுக்கால் சொடுக்கி
மீள இணைக்கும் எத்தனத்தில்
மேய்ப்பன்

குருதி சொட்ட ரணங்கள் கிளர்த்தும்
வலியிலும் முயகலிலும்
அடுத்த கணத்தில்
கசாப்புக் கடை கம்பியில் தொங்குதல்
சாத்தியம் எனினும்
கேள்விகள் முட்டி முலை கனத்து
வேதனை உறுத்த
பட்டி விலக்கி
தனிக்க முயல்கிறேன்
நான்

வெறுமையாய் கரைகிறது
காலம்





படிப்பகம்

www.padippakam.com

3.

முருங்கையிலேறி மீளவெட்டி
சுமக்கிறேன்
வேதாளச் சடலத்தை

ஒரு மாறுதலுக்காய்
புதிதிலும் புதிதென
இலக்கியம் பேசுகிறது வேதாளம்

பூனைகளின் புணர்ச்சிக் கத்தல்
என் செவிநிறைய

கொடிய இருள்
திசையறியா வெளி

மனிதர்கள் உலகு
வெகு தொலைவென்கிறார்கள்

வேதாளச் சுமையும்
இலக்கியச் சுமையும்
என்னுள் கிளர்ந்த கேள்விச் சுமையும்

வெறுமையைச் சுமந்து நடக்கிறேன்
வெளியில்

நகர்கிறது காலம்

4.

மலத்தின் திரளை உருட்டிச் செல்கிறது
வண்டு
உருள்கிறது பூமி

புழுக்களின் இராச்சியத்துள் நுழைந்தேன்
புழுக்கள் அரித்து ஏப்பம் விட்ட
நிலம்

ஒன்றுள் ஒன்று பிணைந்து
புணர்ந்து
புழுக்களின் பந்தாய் உருள்கிறது
உலகு



படிப்பகம்

www.padippakam.com

காது செவிடு பட
புழுக்களின் ஆர்ப்பரிப்பு
என் உடல் வாய் செவியெலாம் ஊர்ந்து
நெளிந்து
மனம் அருவருக்க
நாற்றம் வயிற்றைக் குமட்ட
விரைகிறேன்

வெகு தொலைவென்கிறார்கள்
மனிதர்கள் உலகு

5.
அட்டகாசமாயக் கெக்கலிட்டு
நகைக்கிறது வேதாளம்

ஏனென விழிக்கிறேன்

முட்டாள் கவிஞ!
உன் கவியுலகிருந்து
மீள்
பூமியில் நில்

மனிதம் மரித்து ஆண்டுகள்
பலவாயிற்று
அறி

இது புழுக்களின் இராச்சியம்
இதனுள் மனிதன் வாழ்வது
எப்படிச் சாத்தியம்
புரி

என்னை விடுத்து நீயும்
புழுவாய் ஆகிடு

எப்படி?
விழிக்கிறேன்

வெறுமையாய் கரைகிறது
காலம்

●●●



படிப்பகம்

www.padippakam.com



# அர்த்தநாரீசத்துவம்

1.
மண்ணொடு வானம்
ஊடல் கொள்ளும்

மின்னல் முழக்கம் இடி
முடிவில்
மழை
விண் உகுக்கும் கண்ணீர்

வெள்ளம்
ஓடி
சுழித்துப் பெருகி
பாய்ந்து அடங்கக் குளம்

குளமாய் நிறைந்த கண்கள்
உடைத்துப் பாயும்

அவள்
விழிநீர்ப் பெருக்கில்
வீழ்ந்து மூழ்கிக் கரையும்
எனது
கல்மனது



படிப்பகம்

www.padippakam.com

கிழக்கு வானில் முளைக்கும்
நிலவு

2.
நிலம்
நிலவு
நீர்ச்சுனை

நீரைக் கிழித்து
நிலவை குறித்து
மின்னிப் பொலிந்து
முன்னிக் கிடக்கும்
இளமுலை இரண்டில் நீலோற்பலம்
அரும்பு

அறுகு நெய்த அழகிய விரிப்பு
அவள்
அருகில் நான்
கட்டியத்தோடு களரி எழுவான்
காமன்

நாளத் திரியில் மூளும்
நெருப்பு
குருதி
பாயும் திசைவழிப் படரும்
விம்மி புடைக்கும் புயங்கள்
விரியும் மார்பு
கனத்த முலைகளை
அடக்கும் கச்சை அறுந்து
வீழும்

மேனி தழுவும்
தீயின் நாவு
நாவில் தாகம்

வைரத்தை வைரத்தால் அறு
தீயைத் தீயால் அணை

முத்தத்தில் தொடங்கிற்று
யுத்தம்



படிப்பகம்

www.padippakam.com

தாளம் லயம் சுருதி
இம்மியளவும் பிசகாத் தாண்டவம்
ஆன்ம லயிப்பு
அரவப் புணர்வு
நீண்ட முயக்கம்

அவளுள் நான்
என்னுள் அவள்
அர்த்தநாரீசத்துவம்

அவள்
விழிக் கசிப்பில்
தொங்கிக் கிடக்கும் கடைசித் துளி
இன்பத் துளி

ஊடல்
நீரில் உப்புக் கரிப்பு
கூடல் நீரில் தித்திப்பு

நீரில் அமிழ்ந்து கரையும்
நிலவு

இருள் கலைய செக்கல் வானம்
நீர்ப்படுக்கையில்
மலர்ந்து கிடக்கிறது நீலோற்பலம்
மல்லாந்து கிடக்கிறோம் நாங்கள்

எழுகிறது ஆதவம்.

●●●



படிப்பகம்

www.padippakam.com

கிழக்கு வானில் முளைக்கும்
நிலவு

2.
நிலம்
நிலவு
நீர்ச்சுனை

நீரைக் கிழித்து
நிலவை குறித்து
மின்னிப் பொலிந்து
முன்னிக் கிடக்கும்
இளமுலை இரண்டில் நீலோற்பலம்
அரும்பு

அறுகு நெய்த அழகிய விரிப்பு
அவள்
அருகில் நான்
கட்டியத்தோடு களரி எழுவான்
காமன்

நாளத் திரியில் மூளும்
நெருப்பு
குருதி
பாயும் திசைவழிப் படரும்
விம்மி புடைக்கும் புயங்கள்
விரியும் மார்பு
கனத்த முலைகளை
அடக்கும் கச்சை அறுந்து
வீழும்

மேனி தழுவும்
தீயின் நாவு
நாவில் தாகம்

வைரத்தை வைரத்தால் அறு
தீயைத் தீயால் அணை

முத்தத்தில் தொடங்கிற்று
யுத்தம்

www.padippakam.com

தாளம் லயம் சுருதி
இம்மியளவும் பிசகாத் தாண்டவம்
ஆன்ம லயிப்பு
அரவப் புணர்வு
நீண்ட முயக்கம்

அவளுள் நான்
என்னுள் அவள்
அர்த்தநாரீசத்துவம்

அவள்
விழிக் கசிப்பில்
தொங்கிக் கிடக்கும் கடைசித் துளி
இன்பத் துளி

ஊடல்
நீரில் உப்புக் கரிப்பு
கூடல் நீரில் தித்திப்பு

நீரில் அமிழ்ந்து கரையும்
நிலவு

இருள் கலைய செக்கல் வானம்
நீர்ப்படுக்கையில்
மலர்ந்து கிடக்கிறது நீலோற்பலம்
மல்லாந்து கிடக்கிறோம் நாங்கள்

எழுகிறது ஆதவம்.

●●●



படிப்பகம்

www.padippakam.com



# மனவெளி

மரங்கிளைத்து
வான் மூடி
இருள் மண்டி
வெறுங் காடாய் பரந்து கிடக்கிறது
வெளிவளவு

ஒளிபுக வழியில்லை

சீட்டாட்டம்
வேட்டை
ரகசியமாய்ப் புகை பிடித்தல்
மலங் கழிக்க மறைவு தேடல்
காதல் சரசங்கள்

தினமும்
நிறைந்த கூட்டம்

www.padippakam.com

புதர் களைந்து
தீயது விலக்கி
சீரிட்டு
புதிது புகுத்தி
செப்பனிட்டேன்
பலருக்குப்
பலனளிக்க எண்ணி

தோட்டமமைத்தல்
பராமரித்தல்
பசளையிடலெனப்
பல நூல் பயின்றேன்

இன்று
பூத்துக் குலுங்குகிறது
வளவு

அழகு

அன்று
வந்து போனோர் கூட
அறியாதவர் போல்
விலகி நகர்கிறார்
இன்று

திறந்த வானமும்
நிலவொளியும்
நானும்


நிறைந்து கிடக்கிறது
மனது

●●●



படிப்பகம்

www.padippakam.com



# புதிர்

புரியாத புதிராயிருக்கிறது

நான் நல்லவனா
அல்லது கெட்டவனா?

நல்லவன் என்றார்
ஒருசிலர்
கெட்டவனென்றார்
மறுசிலர்

நேற்றொரு காலை
நல்லவனென்றோர்
இன்று
துட்டனென்று
பொருதி நின்றனர்



*திருமாவளவன்*

படிப்பகம்

www.padippakam.com

அன்றொரு பொழுதில்
கெட்டவனென்றோர்
இன்றைய பொழுதில்
நண்பனென்று
தோளோடணைத்தனர்

ஒவ்வொரு மனிதக் கரத்திலும்
அவரவர் அளவுகோல்
அவரது எடைக்கு
நானே எடைக்கல்

நேற்றும் இன்றும்
நான் நானாகவே
இருப்பதாய் உணர்கிறேன்


நாளையுங்கூட
நானாயிருக்கவே உள்ளம்
அவாவும்

●●●



படிப்பகம்

www.padippakam.com



# ஓவியம்

முயன்று முயன்று வரைகிறேன்
இன்று வரையில்
முற்றுப் பெறாமல் கிடக்கிறது

ஒவ்வொரு தடவையும்
முயலும் போதிலும்
ஏதோவொரு இடைச்செருகல்
புகுந்து விடுகிறது

அசட்டையாய் இருக்கும் போதில்
ஆலோசனை வழங்கும் சாக்கில்
அல்லது
சோர்வுற்றிருக்கும் போது
புத்துணர்வூட்டுவதாகக் கூறிக்கொண்டு
எங்கோ ஒரு மூலையில்
கிறுக்கி விடுகிறது

www.padippakam.com

சிலசமயம்
இதுவே
அழகெனப் புகழ்ந்தும்
அவலட்சனம் என இகழ்ந்தும்
இடைஞ்சல் தருகிறது
வரன்முறையென்று
அறிவுரை சொல்கிறது

எனக்கு
எந்த விதிமுறையோடும்
உடன்பாடு கிடையாது


என் மூலத்தை தரிசித்து
மனதுக்கிசைந்தபடி சுயத்தை வரைய
விழைகிறேன்
சற்று விலகியிருங்கள்

●●●



படிப்பகம்

www.padippakam.com



# யாத்திரை

களங்கட்டிக் கூட்டுக்குள் சிறைப்பட்ட
மீன்போல்
என் வாழ்வு நகர்கிறது
பாறாங்கல்லெனக் கனக்கும்
இதயச்சுமையைப்
புறந்தள்ள முடியாத் துயரத்தில்
வீழ்கிறேன்

ஆண்டாண்டாய் ஊர்ந்து
நகர்ந்து
குழிவிழுந்த வீதிகள் ஊடே
நீளும்
என் யாத்திரை


ஒவ்வொரு கிடங்கிலும்
பொறிவைத்துக்
காத்துக்கிடக்கிறது
மரபு



*திருமாவளவன்*

படிப்பகம்

www.padippakam.com



தவறி வீழும் போதில்
விதியென விலக்கிடமுடியா
இயலாமையில் துடிக்கிறேன்

மீள எழும்போதில்
மரபுக் கோட்டையின்
அடிக்கல்லிலொன்றை
பெயர்த்துக் கொணரும்
எத்தனம் என்னுள்

ஆடுபுலியாட்டமாய்
என் யாக்கையின் யாத்திரை
நகர்கிறது

இதைவிட்டால்
வேறு எதைச்சொல்ல?



படிப்பகம்

www.padippakam.com



# துயருறுகாதை

1.
துருவக் கண்ணில்
தூக்கக் கலக்கம்
கொட்டாவி விடுகிறது
காலம்

அந்திச் சிவப்பில்
இலைகளைத் தோய்த்து
உதிர்த்து
மரங்கள் படுக்கை விரிக்கும்

சல்மன் மீன்களை ருசித்துக்
கொழுத்த துருவக் கரடிகள்
மற்றும்
கூதல் தேச விலங்குகள்
யாவும்
நீள்துயில் வேண்டிப்
பொந்துகள் தேடும்



படிப்பகம்

www.padippakam.com

இன்றோ நாளையோ
வெண்பனிப் போர்வையால்
இழுத்து மூடிப் பள்ளி கொள்ளும்
துருவம்

ஆறுமாத கால நெடுந்தூக்கம்

2.
மழை
வெயில்
பனி
எது பொழிந்தாலும்
காலம் உறங்கா எனதூர்க்
கோவிலில்
ஆண்டு தோறும்
சூர சங்காரம்
கந்தபுராண படனம்
நிகழும்

ஒருவர்
செய்யுள் படித்துச் சந்தி பிரித்து
எடுத்துக் கொடுக்க

நாளில்
இரவு பாதி
பகல் பாதி
இது மானிடர் காலம்

ஆண்டில்
இரவாறு திங்கள்
பகலாறு திங்கள்
அது தேவர் உலகு

விரித்துப் பரப்பி பொருள் உரைப்பர்
மற்றொருவர்

தேவலோக பரபதம் வேண்டி
விரதம் நோற்று
இன்புற்றிருப்பாள் அம்மா



படிப்பகம்

www.padippakam.com

அண்டப் புழுகென
வியந்த நாள் கழிந்து
தேவர்தேசத் தேசியனானேன்
இன்று

3.
தேவதேச நகரிகளெங்கும்
மின்னிப் பொலியும்
மின்னலங்காரம்

அணங்குகள் நிறைந்த
ஆடல் மாடம்

ராப் இசையும்
ரம் மதுவும்
ரம்பையர் நடனமும்

கூத்து
குடி
கூடல்
மூன்றிலும் நீளும் இரவு

உணவு விடுதியின்
அடுக்களை தீயிலும்
பாத்திரம் கழுவும் எந்திரம் முன்னும்
அறையப்பட்டு
அவுணனாய் நான்

இன்றும் நிகழும்
கந்தபுராண படனமும் நோற்பும்

விரதம் நோற்று
இன்புற்றிருப்பாள் அம்மா

●●●



படிப்பகம்

www.padippakam.com



## கரைதல்

ஆண்மகன் அழக்கூடாதென
யார் சொன்னது?

அழு
நன்றாக அழு



படிப்பகம்

www.padippakam.com

களிப்புறும் போது
கட்டுப்படுத்த முடியாத **கண்ணீரை**
கவலையுறும் போதில்
கட்டி அடக்கும்
கட்டாயமென்ன?
அழு

என்னால் தீர்மானிக்க முடியாத
வாழ்வின் சுவடுகளில் சிக்குண்டு
துயரங்கனத்து
இதயம் கல்லாய்
இறுகிக் கிடக்கிறது
அழு
நன்றாய் அழு
என் கல்மனம்
உருகிக் கரைந்து ஓடட்டும்
ஒருசொட்டு மீதமின்றி

நாளைய பொழுதைப்
புதிதாய் சந்திக்க
மனதுக்கு
சுமைகள் கூடாது


அழு
நன்றாக அழு

●●●



படிப்பகம்

www.padippakam.com



# விலங்குகள் பூங்கா

அடிக்கடி நிகழ்வதில்
அதிசயமென்று சொல்வதற்க்கில்லை
ஆதலினாலிது அற்பமுமல்ல

விசித்திர விலங்குகள் இரண்டின்
முரணும் மோதலும்

ஆடுகளமாய்
என் அகம்

ஒன்று
கடிவாளம் கண்பட்டி
கத்தரித்துச் சிலிர்த்த பிடரிமயிர்
பட்டிழைத்த சேணம்
பயிற்சியிலிறுகிய முகம்
சவாரிக்கு பயின்ற
சாதுப்பிராணி



படிப்பகம்

www.padippakam.com

மற்றொன்று
அடவியில் அலைந்ததில்
கொழுப்பேறிய குழுவன்
அல்லது
யானையில் அலியன்
பன்றியில் பிடாரி
முறுகிக் குறுகி காற்றிலே பாயுமாம்
நாகம்
இவற்றிலொன்று
அல்லது
ஒட்டுமொத்தமாய்

மூத்தது
புறப்படும் பொழுதிலெல்லாம்
மூர்க்கமாய் முளைக்கிறது
மற்றொன்று

குறிவைத்து தாக்கியழிக்க
இழக்கிறது
அனைத்தும்

இரண்டும் அம்மணமாய்
புணர்ந்தொன்றாகி
பறக்கிறது
காற்றில் கடலில்
ஒலியில் ஒளியில்
வானின்வெளியில்
மண்ணின்மடியில்
ஓவியமாய்
சுதந்திரமாய்....

பிறக்கிறது கவிதை

●●●



படிப்பகம்

www.padippakam.com



# வேனில்

எப்போதாவது ஒரு பொழுதில்
இப்படி நிகழ்வதுண்டு
இன்றும் நிகழ்ந்தது
ரசாயன மாற்றம்
என் உடற் குடுவைக்குள்

ஆய்வுக் குழாய்களோடு நாட்கழித்த
பள்ளிப் பிராயத்தில்
இப்படியொரு தாக்கம் பற்றி
எந்தவிஞ்ஞான ஆசிரியனும்
வகுப்பெடுத்ததாக நினைவில்லை

உறைபனிக் குளிருள்
சுருண்டு கிடந்த
நரம்புகள் யாவும்
விரிந்து புடைத்தன
துருசு திறந்து பாய்ந்தது
குருதி
நாளவோட்டத்தில் துள்ளி மகிழ்ந்தன
விரால் மீன்கள்



படிப்பகம்

விரல்நுனி அரும்புகள்
பூக்களைப் பிரசவிக்க துடித்தன
தரிசாய் கிடந்த உடற்பரப்பெங்கும்
காற்றிலாடின
பச்சை வயல்கள்
நாட்டார் பாடல் இசைத்தபடி

தலையைச் சுற்றிலும்
பலவண்ணப் பறவைகள்
எங்கே இருந்தன
இத்தனை நாட்களும்?

காது மடலுள் கூடுகட்டி
குஞ்சுகளோடு தாய்ப்புறா
இதழின் மீது கருநிற வண்டு
மதுவுக்காக ஏங்கிக் கிடக்கும்

இதயச்சுவரை கொத்திக்கொத்தி
இடங்கேட்கிறது
இளசுப் பறவை

என் வாய்மொழி
காற்றிலே கரையுது
கவிதைப் பெருமழையாய்


என் விழிப் பார்வையில்
சூரியன் பொசுங்க
சொரியுது பலவண்ணப் பூக்களாய்

ஆய்வுக்கு முடிவெழுதும் ஆவலில்
கரங்கள் அரிப்பெடுக்க
விடை தேடுது மூளை

சாளரவழியே தென்றல் இசைக்கும்
கொடுங் குளிர் வென்று
வேனில் வருகிறார்
இதோ! இதோ!!

●●●

www.padippakam.com



# வீடு

இப்பொழுதெல்லாம்
வீடு பற்றிய துயர்
கௌவுகிறது

என் நினைவில் தவழ்ந்த
முதல் வீடு

மண் சுவரும்
கிடுகுத்தட்டி மறைப்புமாய்
வேப்பந் தூணில் எழுந்து நின்றது

கொள்ளுப் பாட்டன் கால
பரம்பரைச் சொத்து
என் தாய்க்குக்
தாய் வழிச் சீதனம்



படிப்பகம்

www.padippakam.com

அவள்
நிதமும் பசுஞ்சாணியோடு
முள்முருக்கு இலையின் சாறு சேர்த்து
கறுப்பாய்
அழகாய் மெழுக
உலர்ந்த தரையில்
தவழ்ந்து
தென்னங் கீற்றூடே
நிலவைச் சுகிப்பேன் நான்

இருள் கவிந்த
கருக்கல் பொழுதொன்றில்
கைவிளக்கொடு
கயிற்றுக் கொடியில்
துணியெடுக்கச் சென்ற
என் இளையவன்
மூட்டிய தீயில்
அவிந்து
கரியாய்ப் போனது

போனது போக
மீதம் எடுத்துத் தொடுத்த குடில்
மாரி வெள்ளத்தில்
பாறி வீழ்ந்தது

என் இரண்டாவது வீடு
கல்லில் எழுந்தது



படிப்பகம்

www.padippakam.com

மாளிகைக் கனவு
மனதில் மிதக்க
மிடி கையில் கடிக்க
தொடங்கியது
இரண்டறை மட்டுமே

முப்பது வருட முடிவிலுங் கூட
முடிவின்றிப் போயிற்று

பின்நாளில்
என் விடலைத் துடிப்பை
நவீனத்தில் குழைத்து
முளைத்தது
மூன்றாவது வீடு

அகலச் சாளரம் ஊடே
நிலவின் ஒளியும்
வாடைத் தென்றலும்
வண்டிசை கீதமும்

பருகிக் கிறங்கி
கணப்பொழுது
கண் மூடித் துயிலுமுன்
பலாலிப் படைவீட்டின்
விழுதுகளுள் சிக்கி
சூனியமாய் போனது என்னூர்

இன்று உலகெல்லாம் அலையும்
இரவல் வாசம்
எனக்கு
இனி எப்போ வீடு?



படிப்பகம்

www.padippakam.com

# பசலை படர்ந்த நிலம்

சூரியன் எழும் போதிலெல்லாம்
நான் விழித்துக் கொள்கிறேன்

அவன் கரங்களால்
அணைத்துக் கொள்ளும் பொழுதுகளில்
என்னுடல் தகிக்கும்
உணர்வுகள் கிளர்வுறும்

அவன்
கண்களில் மின்னல் தெறிக்கும்
இதயவொலி
நாற்புறமும் சிதறி முழங்கும்
மூச்சுக் காற்று
என்னில் மோதும்

அவன்
மழையாய்ப் பொழிவான்
நான்
நிலவாய்க் குளிர்வேன்

மேனியெங்கும் துளித்துளியாய்
வெள்ளமாய்
பிரவாகமாய் பெருக்கெடுக்கும்
இன்பம்

உன்னை
மலர்களால் அர்ச்சிப்பேன்
சுகந்தம் தூவுவேன்
பல்லாயிரம்
பறவைகள் ஒலியெடுத்து
பாடலிசைப்பேன்


நீ எழுக
என்
மோகம் தணிக

●●●



படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்க் கனேடியனும் நானும்

உடல் உழைத்து
களைத்துச் சோர்ந்த
துளிப் பொழுது அமைதியை
அழித்து
அலறுகிறது தொலைபேசி

எதிர்முனையில் அவன்

தீர்மானமாக மறுதலித்தேன்
உன்னுடன் பேசுவதில்
கிஞ்சித்தும்
இசைய மறுக்கிறது
மனது



படிப்பகம்

www.padippakam.com



முன்னொரு நாளில்
கவிதை பற்றிப் பேசினேன்
ஒரு கவிதைக்காய்
எவ்வளவு பணம் கிடைக்குமென்றான்
பூக்களின் அழகில் வியந்தேன்
மாலை தொடுத்தால்
பெருந்தொகை
பெறுமென்றான்

காலாற நடந்த
மாலை பொழுதொன்றில்
தேனீர்ச்சாலையுள் நுழைந்தோம்
விலைப் பட்டியலில் குறியாயிருந்தான்

வாழ்வின் இருப்புப் பற்றி
விவாதித்தோம்
ஆயுட்காப்புறுதி செய்துவிட்டாயா?
வினாவினான்


உலகின்
ஒவ்வொரு துளியையும்
பருகத் துடிக்கும் கவிஞன் நான்

இன்னும் இவனுடன் பேச
என்ன இருக்கிறது

●●●


படிப்பகம்

www.padippakam.com



# ஒட்டுண்ணிகள்

துருவச் சோலையில் பகல் நீளும்
காதல் சரசங்களை ஒற்றிச் சுமந்துவரும்
தென்றல் காற்றும் நானும்
வானம் சிலிர்க்க
பனியுலர்ந்த புல்வெளிகள்
பூத்துச்சிரிக்கும்

உணர்வுகளைக் கருத்தரித்த பீரங்கி
எத்தனை காலந்தான்
மௌனிக்கும்?

சில்வண்டுகளின் சிதறல் ஒலி கிழிய
என் பாடல் காற்றிலே
மிதக்கும்

இவர்கள்
துருவத்தின் குருவிச்சை மனிதர்கள்

சங்கத்தமிழர் பெருமை சொல்லி
சொந்தத் தலைக்குச்
சாயமிடும் விண்ணர்கள்



படிப்பகம்

www.padippakam.com

வேர்மண்ணில் சொரியும்
மழலைப்பூக்களைச் செய்திகளாக்கிப்
பணம்பண்ணும் வித்தகர்கள்
முகங்களைத் தொலைத்து
முகவரிதேடி
ஒருவருக்கொருவர் முதுகு சொறிந்து
சுகித்திருக்கும் எத்தர்கள்

இவர்கள்
துருவத்தின் குருவிச்சை மனிதர்கள்

விளக்குமாத்துக் கட்டுகளுக்குக்கூட
பட்டுக்குஞ்சங் கட்டலாம்
மூட்டைப்பூச்சிகளுக்கெல்லாம்
ஊட்ச்சத்தெதற்க்கு

நாளை
இந்த நச்சுமனிதர்களின் நடுகற்களைக்கூட
மிச்சம்விடாதீர்கள்

நீ நடந்த கால்தடங்கள்
கபாலத்தினுள்
ஆயிரம் புழுக்களாகி அரிப்பெடுக்கும்
கண்டுவந்த காட்சிகள்
பசுமைபோலத் தோன்ற
உள்ளம் உளைவு கொள்ளும்
அவல மனிதரின் உருக்களுள்
உன்னை
வார்ப்படஞ் செய்யத் துடிக்கும்

சிரத்தை கொள்
சித்தத்தின் தேடலுக்குள்
உன்னை சித்திரப்படுத்து
உன்
சுயமறிந்து வாழக் கற்றுக்கொள்


நாளை கூதல் தேசத்து
பைன் மரக் காட்டினுள்
பனைகளும் வேர்பரப்பி
உறுதிகொள்ளும்

●●●



படிப்பகம்

www.padippakam.com



# பெற்றதார் பெறுவார் உலகில்

காத்திருக்கிறோம்
விமானநிலைய முன்றலில்

புதைகுழி பெருகும் தேசத்திருந்து
தப்பித்து வருகின்ற உறவுகளுக்காக
காத்திருந்த
அந்த விமானநிலைய முன்றலில்
காத்திருக்கிறோம்



படிப்பகம்

www.padippakam.com

இந்திய தென்புல
சினிமா நட்சத்திரங்களுக்காக
சினிமா நட்சத்திரங்கள் வாயசைக்க
குரலெடுக்கும் குயில்களுக்காக
சினிமா நடிகைகளின் முலையழகில்
தமிழ் வடிக்கும் கவிகளுக்காக
காத்திருக்கிறோம்
மாலைகள்
மஞ்சள் பட்டுத் துண்டுகள்
பதாகை தூக்கிகள்
படப்பிடிப்பு தளபாடங்கள்
நேரடி ஒலிபரப்பு விண்ணர்கள்
கோஷமிட சிறு கும்பல் சகிதம்
காத்திருக்கிறோம்

கனவுலகிருந்து
இன்று காலை வந்திறங்கினான்
ஒருவன்

நாங்கள்
கைகுலுக்கி
முத்து வைரம் என
வாழ்த்தொலித்து
உதட்டுமொழி கேட்டு
அதிசயமென ஆர்ப்பரித்து
அடிகழுவி
வீழ்ந்து
அடிப்பாதம் பற்றி
ஆசிகேட்டு
பேற்றோம் பெரும் பேறு!

●●●

www.padippakam.com



# விழுப்புண்

பனிப்புயலில் தனித்தலையும்
பறவையின்
ஓலமொன்றில்
நான் கரைந்துபோகிறேன்
அது என்னுள் அதிர்கிறது
சிறு இலக்கியமொன்றின்
செறிவினைப் போல

கவிதையின் சாயலில்
தாய்மையின் துயரில்
ஆக்ரோஷப் பார்வையில்
மனநோயாளியை பார்க்கின்ற பரிவில்
மனித மலத்தை மிதித்துவிட்ட அருவருப்பில்
சில சமயம்
போர்ப்பறையின் சன்னதத்தில்

எப்படிச்சொல்ல?
என் வார்த்தைகளில்
அடங்கிப்போக மறுக்கிறது



படிப்பகம்

www.padippakam.com

நாளையொருகால்
உன்செவியிலும் அதிரல் கூடும்
உணர்வுகளைத் தீட்டிக்கொள்
முடிந்தால்
உன் அயலவனுக்கும் சொல்

கடல்மீது நிலவு காய்கிறது
துருவமெங்கும் பனி சொரிகிறது
சுதந்திரம் கண்முன் விரிந்துகிடக்கிறது
சந்தனம் மெத்தியதில்
அடுத்தவன் புட்டத்தை தேடி
அலையும் மனிதர்கள்

நீ சாதனைப் பட்டியல் படித்து
மகிழும் போதிலெல்லாம்
தனிமனிதப் பலவீனம் என்று
தள்ளிவைக்க முடியவில்லை
என் சமூகம் மீதில்
சீழ் நாறுவதாக உணர்கிறேன்

வயிறு குமட்டுகிறது.
முகவரி தேடும் முகங்களை
செய்தித் தாள்களில்
காணும் போதிலெல்லாம்
கருங்கல்லில்
காகம்
எச்சமிட்ட இலட்சணத்தின்
அருவருப்பில் துடிக்கிறேன்

கூடுகட்ட
இடம் கிடைத்துவிட்டது என்பதற்காய்
நான் வித்துக்களை விதைக்கச்
சித்தமாயில்லை
வேண்டுமாயின்
களி கொள்ளலாம்
கலவியும் கொள்ளலாம்
முட்டையிடுவது பற்றி முடிவெடுக்கு முன்
குஞ்சுகளின் எதிர்காலம் பற்றிச்
சிந்திக்க வேண்டும்
சற்று அவகாசங்கொடு

●●●



படிப்பகம்

www.padippakam.com



# மழை

1.
இன்று இடியுடன் கூடிய மழை
பொழியும்

மொழிகிறது
வானிலை அறிக்கை

புகலிடவாழ்வினுள்
சபிக்கப்பட்ட நான்
நனைய
என்றும் பெய்ததில்லை
மழை

பால்யத்து மழைநாட்கள்
பெய்யெனப் பெய்கிறது
இன்றும்

அன்று காலத்தின் உக்கிரத்தில்
வான்கிழிந்து கொட்டியது
பெருமழை



படிப்பகம்

www.padippakam.com

தவளைகள் புணரக்கிளர்த்திய
ஒலியும்
அம்மாவின் சேலையுள் குடங்கக்
கனன்ற உடற்சூடும்
உறங்கிப்போகிறேன்

மறுநாள் பள்ளி
அரைநாளில் விடுமுறை

வீடுதிரும்பும் வழியில்
சுடலைவெளி நிறைய வெள்ளக்காடு
முழந்தாள் தாண்டி
அரைக்களிசான் விளிம்பெல்லாம்
ஈரம்

நீரிலாடி நேரங்கழித்து
வீட்டுள் நுழைகிறேன்
முதுகில் உறைக்கிறது
அப்பா தந்த பூவரசம்பழம்
நினைவிடை நான் நனைய

2.
மறுமழை
மூன்று நாட்கள் அடைமழை

மேட்டுக்குடி ஒழுங்கை
நீரோடி
வெள்ளவாய்க்காலாதல் இழுக்கென்று
அணையிட்டு நீர் அடக்க
நிறைந்து கிடக்கிறது வளவு

தலைவாசல் படிதாண்டி உள் நுழைய
ஒரு விரலிடை இருக்கையிலே
மழை ஓய
அடுப்பில் உலையேற்றி
அரிசி வாங்கிவர ஓடுகிறாள்
அம்மா

www.padippakam.com



வாசல்படியிருந்து
கப்பல்கள் மிதக்கவிட்டு
களிப்புற்றிருக்கிறோம்
நாங்கள்

மறுபாட்டம் சொரிகிறது
வானம்
அம்மாவும் இல்லாத் தனிமை
நீரெழுந்து படிதாண்டி உள்நுழைய
ஊர்திரண்டு அணை வெட்டிச் சிறைமீட்க
பதிகிறது நெஞ்சில்

3.
ஊழி தொடங்கி ஊரெரிந்த போதில்
பொழிந்தது
மூன்றாம் மழை

தீயின் விழுதுகளுள் விலகி
பெடியளுக்கு
மண்ணெண்ணை தேடி
வெள்ளாங்குளம் போவதாய்
போக்குக் காட்டிவிட்டு
சங்குப்பிட்டித்துறையில் படகிற்கு
காத்திருக்கிறேன்


படிப்பகம்

www.padippakam.com

பெருவெளி
நடுநிசி
மனிதர் வரிசை
துறையின் திசைநீள
துவக்கொடு அலையும் பெடியள்

உயரக்காற்றில் எழுகிறது
ஹெலியொலி
கிலியில் உறைகிறது குருதி

திடீரென
வானம் கருக்கொண்டு
பெருந்துளிகள் சொரிய
குலைகிறது மனித ஒழுங்கு

ஒதுங்க நிழலற்று
உடல் விறைத்து
தெப்பமாய் நனைந்திருக்கிறேன்

ஒருமணி கழிய
வானில் பூக்கிறது வெள்ளி
வயிற்றில் பூக்கிறது பசி

பிரிவின் துயரொடு
காதற் துணைவி கண்ணீர் கலந்து
கட்டிய சோற்றில்
கையை நுழைக்கிறேன்
மழைநீர் கலந்து நெக்குருகி
கிடக்கிறது சோறு
கூடவே மனசும்

பால்யத்து மழைநாட்கள்
பெய்யெனப் பெய்கிறது
இன்றும்

●●●



படிப்பகம்

www.padippakam.com



# கவித்திருப்பு

என்னுள் ஒரு கவிதை
கண்ணாமூச்சியாடுகிறது.

அடிக்கடி தோன்றுவதும்
விரிந்து படர்வதும்
ஆறஅமர
இருந்து
பேனாவைக் கையிலெடுக்க
ஓடி ஒளிவதுமாய்
அந்தரிக்க வைக்கிறது

அலுவலில் இருக்கும்போதில்
சனநெருக்கடியில்
பிரயாணிக்கையில்
வேலைத்தலக் கடமையிடை
உணவருந்துகையில்
நண்பர்களோடு உரையாடுகையில்



படிப்பகம்

www.padippakam.com

திடீரெனத் தோன்றி
என்னைப் பிடி பார்க்கலாம்
என
சவால்விடுக்கிறது

இன்று
தொழிலகக் கடமையிடை
மெல்ல
நுழைந்து
முழுவதுமாய் வியாபித்து
சொற்களின் கட்டுமானத்தில்
எழுந்தாடிய கூத்தில்
எனையிழந்து
பவ்வியமாய்
பதுங்கியிருந்து
பிடிக்க எத்தனிக்க

எப்படியோ
இன்றும் எனை ஏமாற்றிவிட்டது
எசமானன்
திட்டிவிட்டுப் போனதுதான் மிச்சம்

எப்படியும்
அதைப் பிடித்துவிட
உள்ளம் அவாவுகிறது

எப்படிப் பிடிப்பது
ஓர் எழுத்துக்கூட ஊனமின்றி

காத்திருக்கிறேன்

●●●


படிப்பகம்

www.padippakam.com



# யாரொடு நோவேன்?

எப்படி இசைப்பேன்
என்
தேசத்தின் பாடலை?
அந்த
மண்ணின் ஓவியத்தை
எங்ஙனம் வரைவேன்?

நச்சுக் கொடியென
நான்கு புறமும் கிளை பரப்பி
படர்ந்து கிடக்கும்
படைமுகாம்களை
எவ்வண்ணத்தால் தீட்டுவேன்?

காணும் இடமெல்லாம்
நீக்கமற
நிறைந்து கிடக்கின்றன
முட்கம்பி வேலிகள்

மண்மூடை அடுக்கிய
காவலரண்கள்



படிப்பகம்

www.padippakam.com

நடுவே
நிறுத்திவைக்கப்பட்ட துப்பாக்கிகள்
அதில் கொழுவி விடப்பட்ட
மீசை கறுக்காத
இராணுவச் சிப்பாய்கள்
அவர்கள் முகங்களில்
அப்பியிருக்கும்
தூக்கக் கலக்கம்
கொலைவெறி
மரணபயம்
இவற்றைறெல்லாம்
எந்த வண்ணத்தால் பூசுவேன்?

பிடுங்கியெறியப்பட்ட
படைமுகாம்களின்
அடியிலெல்லாம் புதைகுழிகள்
அதில் தோண்ட தோண்ட
தொடரும் எலும்புக்கூடுகள்

எலும்புக்கூடுகளின்
நிணத்தோடும் தசையோடும்
அழிந்துபோன நிஜங்கள்
நிஜங்களில் இருந்து
வாழ்வு பற்றிய கனவு

ஒருத்தி
பள்ளிக்கு போனாள்
இன்னொருத்தி
பார்த்துவரப் போனாள்
வேறொருவன்
சந்தைக்குப் போனான்
போனவர் போனவர்தான்
இவர்களின் உருக்களை
எங்ஙனம் வரைவேன்?

வெள்ளரச இலைகளுக்கு
இரத்த வண்ணம் தீட்டி
அதன் கீழ்
புத்தனுக்கு எலும்புக்கூடுகளால்
பீடம் அமைப்பேன்

www.padippakam.com



அவன் முகத்துச் சாந்தத்தை
அழித்து
அகோரத்தை எழுதுவேன்
அதுவே என்தேசத்தில் புத்தனுக்கு
அழகு

புத்த பிக்குகளின்
மழித்த மண்டை மேல்
தலைக்கவசம் சூட்டி
கைகளில்
கொலைக் கருவிகளை
வரைவேன்

முடிவாய் கூறுங்கள்

என் மண்ணை சபித்து
யுத்தத்தை துப்பிய
முனிவன் யார்?
அவன் முகத்தின் அவலத்தை
எப்படி சித்திரிப்பது?

●●●



படிப்பகம்

www.padippakam.com

# மூன்று- பு
## (புலவன்- புரவலன்- புகழ்)

அதோ!
அந்தப் பேனாமுள்ளை முறித்து வீசு
அவன் குரல்வளையை நெரி
எல்லை போடு
வெளியே நிற்பவனை மிதி
துவம்சம் செய்
நீ உள்ளே வா
முதுகு சொறி
என் உள்ளம்
சுகிக்கும் வரையில்

**விழா**
என் கன்னக்கோலுக்கு
பத்தாண்டு விழா
இல்லை இருபதாண்டு.... இதுவும்
போதாது.... முப்பதாண்டு....
ஆமாம் முப்பதாண்டு
இப்போதைக்கு இருக்கட்டும்


ஏய் புலவா!
என் ஆஸ்தான புலவா!!
பாடு
புகழ் பாடு
எட்டுத்திக்கும் ஒலிக்கப் பாடு

பாடல்
நாங்கள் பெருமை கொள்வோம்
கல் தோன்றி
மண் தோன்றாக் காலத்து
முன் தோன்றிய குடிகளென்பதில்
நாங்கள்
பெருமை கொள்வோம்



படிப்பகம்

www.padippakam.com



இன்னும்
ஒலிவாங்கியில் தொங்கும் போதில்
பதவிக்கதிரையுள் புதையும் போதில்
மலர்மாலைக்குள் தலை நுழைக்கும் போதில்
விளம்பரத்தாள்களில் முகம் பார்க்கும் போதில்
வெற்றுத்தாளில் கையொப்பமிட்ட
ஜே.ஆர். காலத்து மந்திரி போல
விருதுக்கு கைகட்டிச்
சேவகம் செய்யும்போதில்
நாங்கள் பெருமை கொள்வோம்
துருவ பூமியில்
தமிழ் வளர்வதாக

நிறுத்து
என் செவிப்பறை நுழைந்தது அபசுரம்
எவன் குரல்
என் குரலா
பிடுங்கி எறி தூர

வெளியே
வீழ்ந்த ஆத்மா சொன்னது

காஞ்சோண்டிகளை அழி
பனங்கொட்டைகளை விதை

●●●



படிப்பகம்

www.padippakam.com

# வேள்வி

ஆடிமாதம்
புளியடி வைரவர்கோவில் வேள்வி

முன் வெள்ளி
விளக்கு வைப்பு

பந்தற்கால் நாட்டி
ஆயத்தங்கள்
அமளியாய் நடக்கும்

ஆண்டு முழுவதும்
காய்ந்து துருவேறிக் கறுத்த
சூலங்கள்
புதுப்பொலிவு பெறும்
பந்தல் முளைக்கும்
நாலு புறமும் வெள்ளை கட்டி
வேப்பிலை மாவிலை தோரணம் தொங்க
வெள்ளி மாலை
தொடங்கும் வேள்வி

இரவிரவாகச் சின்னமேளம்
இரட்டையர் குழுவின்
இன்னிசை விருந்து
இடையிடைப் பறையொலி

உருக்கொண்டெழுவார்
பைரவர் சாமி
நாக்கை நீட்டி
கடித்து
கண்களை உருட்டி
விளித்து
முரசு லயத்தில் கால்களை
உதைத்து
ஆட்டம் நிகழும்

www.padippakam.com



அருள்வாக்குச் சொல்லி
வேப்பிலை அடித்து
வீபூதி எறிந்து
சத்தியம் கேட்பான் சாமி

'புதிதாய் எனக்கு சூலம் வை!'
'மறுமுறை
பெரிதாயப் பொங்கல் செய்!'
'வெள்ளி தோறும் விளக்கிடு!'

ஆசீர்வதிப்பான்

சனிநாள் காலை

பெருமடை
பொங்கல்
படையல்
கடா அழைப்பு

மறைப்புக் கட்டிக்
கைத்தீன் ஊட்டிய
ஆட்டுக்கடாக்கள்
இரவுமுழுவதும் உண்ட
களைப்பிலும்
பருக்கிய பனங்கள்ளின்
மப்பிலும்

www.padippakam.com

மாலை மரியாதைச்
சுமையிலும் அசைய
கடாக்கள் ஊர்வலமாகும்

பைரவசாமியின் அகோரம்
உச்சங்காண
கடாப் பலி நிகழும்

நாற்பது..... எழுபது....
நூறு.... ஆயிரம்....
அதனைத்தாண்டி
வீழ்வதும் உண்டு

ஆட்டுப்பிரட்டல் கறியின் வாசனை
காற்றில் தூக்கும்
அன்று
ஊர்வெளியெங்கும் கலக்கும்


இன்றும்
அங்கு வேள்விகள் நிகழும்
நாற்பது..... எழுபது....
நூறு.... ஆயிரம்....
அதனைத்தாண்டி
வீழ்வது உண்டு

ஆனால்
சாமிக்கிப்போ
ஆட்டுக்கடாக்களில்
நாட்டங் கிடையாது

●●●


படிப்பகம்

www.padippakam.com



# O`கனடா

வயிற்று வலி
பிரசவ வேதனை
அடி வயிற்றைப் பிடித்தபடி
முனகித் துடிக்கிறது
என் பேனா

பல நாளாய்
என் உணர்வுகளோடு ஊடி
கலவி கொண்டு
கருத்தரித்த
நிறைமாதக் கர்ப்பிணி
திடீரென நோக்காடு கண்டு
விரவியது
பிரசவ விடுதிநோக்கி

விடுதியெங்கும் கந்தக நெடி
சூழவும் முனகல்கள்
ஒப்பாரி
இடையிடையே வீரமுழக்கங்கள்



படிப்பகம்

உள்ளே
ஒரு படுக்கையைச் சூழவும்
உடன்மீன், இறால், நண்டு,
இறக்குமதிப் பட்டு,
மலிவு விலை மளிகைப் பட்டியல்
இதன் நடுவே
கணக்குப் பார்த்தபடி
பாவம் பிணியாளி

மறு கட்டிலில்
நிணமும் சதையுமாய்
ஒரே நாற்றம்
துருவேறிய துப்பாக்கிகளையும்
வீழ்ந்து நொருங்கிய
விமானச்சிதறல்களையும்
கோணி உறைக்குள்
தலையணையாக்கி சாய்ந்தபடி
நினைந்து நினைந்து நெஞ்சம் புலம்பும்
பிறிதொன்று

அப்பால்
அழுகிச் சீழொழுக
அதைச் சொறிந்து சொறிந்து
சுகித்திருக்கும்
வேறொன்று


அருவருக்க
நாற்றம் வயிற்றைக் குமட்ட
வெளிப்போந்து ஓடியதென் பேனா

திடீர்ப்பிரசவம்
சுகப்பிரசவம்

கட்டாந் தரையெங்கும்
என்
கவிதைக் குஞ்சுகள்

●●●

www.padippakam.com



# தலைப்பிடப்படாத கவிதை

தயாராயிருக்கிறேன்
ஒரு கவிதையாய் விரிய

சிறகை அகல விரித்து
இறகுகளில் அதிர்வூட்டி
காற்றைக் கிழித்து
சிறகசைத்த
நேற்றைய வானில்
மீள
உன்னியெழுந்து
சிறகசைக்க முனைகிறேன்

இலையுதிர்ந்தாலும்
உயிர் மூச்சை
வேரின் அடியுள் ஆளப்பதுக்கி
மீளத்துளிர்க்கும் சிறுதோப்பாய்
ஒருதுளி விந்தின் வீரியத்துடன்

ஒன்றே வானம் பூமியும் அஃதே
இடையிரவில் எப்படி நிகழ்ந்தது
ஒரு யுகத்தின் மாற்றம்?



படிப்பகம்

www.padippakam.com

எதுவும் இயல்பாய் இல்லை
புயலாய் எழுகிறது
உருவழிந்த மனிதத்தின் இறுதிமூச்சு
சூல்கொண்டு கொதிக்கிறது யுத்தம்
உலகச் சந்துகள் அடங்கிலும்

காற்றை ஆழ உள்வாங்கி
பெருமூச்சாய் விடவும் முடியவில்லை
நஞ்சில் வெந்து போகிறது இதயம்

என் குரல்வளையை
எப்போதும் தழுவிக்கிடக்கிறது
துப்பாக்கியின் விரல்கள்
எக்கணம் பிடியிறுகும் எனச் சொல்வதற்கில்லை

விரல்கள் நெருடும் உறுத்தலிடையிலும்
கல்லடிபட்ட மாவின் பூக்களாய்
விரவிப்பூக்கிறேன்

வினாடிக்கு இலட்சமாய் பிறக்கின்ற
குழந்தைகளின் முதல் மூச்சிலும்
மழலைக் குரலிலும்
என்பாடலை
உயர்த்தியிசைக்க விழைகிறேன்

போதும் எனக்கு
ஒருதுளி ஒளியும்
அதில் எழும் வெப்பமும்

●●●



படிப்பகம்

www.padippakam.com



# வடலி வதை படலம்

நொண்டிச்சூரியனை
இழுத்துவந்து சிறையிலடையுங்கள்
வெண்நிலவுக்கும்
சில்லறைக் கடை விரித்த நட்சத்திரங்களுக்கும்
கதவடைப்புச் செய்யுங்கள்
வானவீதிக்கு தடைகள் போட்டு
முகிற் கூட்டங்களையெல்லாம்
முடக்கிவையுங்கள்

என் மண்ணில் வீழ்த்தப்படும்
பாலருக்காய் நான் பாட
பிரபஞ்சம்
ஒரு கணம் நிசப்தப்படட்டும்

செவிட்டுத் துவக்குகளே
இத்துளிப் பொழுதமைதியைக் கிழித்து
உமக்கெதிராய்
போர்ப் பிரகடனம் செய்வேன்



படிப்பகம்

www.padippakam.com

நீவிர்
பட்டுக் கட்டி பகட்டாடி வர
பாலகர் உயிர்கள்
பட்டுப் பூச்சிக் கூட்டுப்புழுவல்ல
நாளை
சோளகத்தி ஆடிச்
சூரியனோடு சன்னதஞ்செய்யும்
வைரப்பனைகளின் சின்ன வடலிகள்
வியர்வை நெடிச் சேலைத் தலைப்பில்
முடிந்து
பெருத்த கற்பனை முட்டைகளில்
சூல்கொண்ட
குருவிக் குஞ்சுகள்

ஊர்மனை ஒழுங்கை எல்லாம்
காக்கிகட்டிக் காற்றாடி வருவீர்
கல்லறையை கோவிலென்று
வணங்கிக் காட்டுவீர்
வீரன் அல்லது துரோகி
என்று மகுடம் கட்டி
உயிரை மெல்ல உறிஞ்சிக் குடிப்பீர்
எல்லாம் இனிதாய் நிகழும்
சடங்கைப் போல

வாழ்வின்
இருத்தலையறியா மழலைகள்
இவர்கள்
மரணமே இலக்கென்று
காற்றிலே கரைவர்


செவிட்டுத் துவக்குகளே
மனிதப் பிஞ்சுகளில்
மரணத்தை இறையாதே
நாளை எழும்
உனக்கெதிராய்
புதிய பரிணாமம்.
அதுவரையில் தொடரும்
என் போர்ப் பிரகடனம்

●●●



படிப்பகம்

www.padippakam.com



# கண்ணீர் கசியும் நிலவு

நான் மரணத்துள் வீழ்ந்தேன்
சில மணித் துளிகளுக்கு முன்
உடற்சூடு
இன்னமும் தணிந்திடவில்லை

எப்படி முகர்ந்தோ
சூழ்ந்துகொண்டன
பிணந்தின்னிப் பிராணிகள்

தலையாரி ஓநாய்
தலை மீதமர்ந்து
மண்டையைக் குடைகிறது
மற்றொரு நாய்
மார்பைப் பிரித்து
இதயத்தை மெல்ல
இழுத்துச் செல்கிறது



படிப்பகம்

www.padippakam.com

ஆண்குறி சுவைக்கும்
கடுவன் பூனை
புரியாத புதிரென அங்கலாய்க்கிறது
காகங்கள் சில
கால்களைக் கொத்தி இழுத்தபடியே
தன்னினத்தைக் கூவியழைக்கிறது

கழுகுகள் மீதிக்காய்
வட்டமிடுகின்றன

கூட்டத்தின் மத்தியில்
உடல் புசித்த ஓநாய்
பசியடங்கத்
தகவல் சொல்கிறது

ஊன் சுவைத்ததன் கடனாய்
இவனுக்கு நாங்கள் ஈய்வோம்
விருது

வானத்து மூலையில்
இளநிலாத் துண்டொன்று
மெல்லக் கசிகிறது
கண்ணீர்

தெப்பமாய் நனைகிறது
என் ஆன்மா.

●●●



படிப்பகம்

www.padippakam.com



# எச்சம்

பகல் தூக்கம்
உடல் கெடுதி
கனாக்கள் கூட பலிப்பதில்லை
மூதாதை காலத்து ஐதீகமிது

நூதனசாலையாய்
என் ஊர்
உள் நுழைகிறேன்

ஊர் துடைத்து
ஊர்காத்த இயக்கம் துடைத்து
ஊடுருவிய ஆமி துடைத்து
போனவை போக
எஞ்சியவை
காட்சிப் பொருட்களாய்



படிப்பகம்

www.padippakam.com

தேடுவாரற்ற அம்மிக்கல்
வல்லுறவில் எஞ்சிய
வளையல் துண்டுகள்
விதவிதமான ரவைக் கோதுகள்
தவறவிட்ட தலைக்கவசம்
குருதிக்கறைச் சீருடை ஒன்று
அதன்கீழ்
சிதிலமாய் போன சுவரொட்டித்துண்டு

மாவீரச்செய்தி
தோற்றம். 10-07-79.
வீரமரணம். 08-10-90.

பால்குடி வயது

வெளியே
கும்பல்கூட்டத்தில்
ஆண்டபரம்பரைக் கோஷம்
தாயகக் கூப்பாடு

விழிப்பு வந்தது


என் வீட்டு வாசலில்
உண்டியலோடு இருவர்

●●●



படிப்பகம்

www.padippakam.com



# முல்லைத்தீவு

சதைக் குவியலாய்
சிதைந்து கிடக்கிறது
சூரியன்

வான வெளியெங்கும்
சிதறிக் கிடக்கிறது
இரத்தம்

இந்த அதிகாலை பொழுதில்
குண்டுப் பொதியுடன்
சூரியன் மீதில்
பாய்ந்த
பாலன் யார்

●●●



படிப்பகம்

www.padippakam.com



# இனி
# இன்னொரு தேசியன்

1.
காத்திருந்த படி
இளவேனில் நாளொன்றில்
தொடங்கியது
சடங்கு

பிரதான குரு பிரசன்னமாக
எழுந்து
வணங்கி
பின் அமர்ந்து
அவர் உரை செவியில் வாங்கி
பின்னெழுந்து
வலக்கை உயர்த்தி
முதலில் அவர் மொழிய
அதையே நான் மொழிய
நிகழ்ந்தது
சடங்கு



படிப்பகம்

www.padippakam.com

2.
சூதாட்டச் சருக்கத்தில்
யுதிஷ்ட்ரன் வேடம்
எனக்கு
சகுனி
பகடையை உருட்டினான்
புத்தம் புதுப்
படைக்கலன்கள் உருண்டன
இரு புறமும்
படைகளை நகர்த்தி ஆடியது
அவன்
ஒவ்வொன்றாய் இழந்தது
நான்

வீடு
வளவு ஊர் உழைப்பு
உறவு சுற்றம் இனம்
நாடு..
எல்லாம்

குளிருடை தரித்துத்
துருவம் புகுந்தேன்

3.
தலையில்
முள்முடி இறுக்கப்படுகிறது

எனக்காக
எனக்கு பின் எழுகின்ற
ஏழேழு தலைமுறைக்காக
என் தலையில்
முள்முடி இறுக்கப்படுகிறது


படிப்பகம்

www.padippakam.com

இனியென்ன
என் மொழி, உழைப்பு,
தனித்துவம்
எல்லாம்
திருடப்படும்
என்வலி அறியாது

புதிது புகும்
4.
முந்நூறாண்டுகள்
உழுதோம்
எங்கள் நிலத்தை அவர்க்கு

இனியும்
உழுவோம்
அவர்கள் நிலத்தை அவர்க்கே

5.
மீள மொழிகிறார்
குரு

இன்றிலிருந்து
இந்த நாட்டின்
சங்கைக்குரிய பிரஜைகள் நீவீர்
அருகில் உள்ளவருடன்
கைகுலுக்கி மகிழுங்கள்
கச்சிதமாய் முடிகிறது
சடங்கு

களங்கட்டிப் பொறிக்குள்
நுழைந்த மனிதன்
நான்
இதில்
சுகிக்க என்ன இருக்கிறது?

●●●



படிப்பகம்

www.padippakam.com

# நினைத்துப் பார்க்கிறேன்

| | |
|---|---|
| எஸ். முரளிதரன் | இவர்கள் |
| றஷ்மி | |
| மு.க.மு.மன்சூர் | |
| அ. கந்தசாமி | |
| பொன்னையா விவேகானந்தன் | |
| சக்கரவர்த்தி | |
| கருணா | |
| சேரன் | |
| பிரதீபா தில்லைநாதன் | |
| லக்ஷ்மி | |
| கலைச்செல்வன் | |
| | |
| தாயகம் | இதழ்கள் |
| சூரியன் | |
| ஈழநாடு | |
| ழகரம் | |
| எக்ஸில் | |
| உயிர்நிழல் | |
| இனியும் சூல்கொள் | |
| யுத்தத்தைத் தின்போம் | |
| தோற்றுத்தான் போவோமா | |
| சரிநிகர் | |
| | |
| டிஜி வரைகலை அமையம் | இன்னும் |
| சங்கர் அச்சகம் | |
| | |
| உரமிட்ட வாசக நன்பர்கள் | |
| | |
| என் இனிய சுமதி | இதயத்தில் |
| | |
| கரிகாலன் | |
| கபிலன் | |
| கன்னிகா | |



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



போர்
தவிர்த்து
நீள்பயணம் நடந்து
நெடுநாள் கழிந்தும்
காலடிக்கீழ்
பெருநிழலாய்த் தொடர்கிறது
போர்

எக்ஸில் வெளியீடு

படிப்பகம்